




விலை ரூபா 40

பக்கங்கள் - 12

# ஒருவன்

ஆண்டு: 01 இதழ் : 43 குரோதி வருடம்
கார்த்திகை மாதம் 24 ஆம் திகதி திங்கட்கிழமை (09.12.2024)




# கிளர்ச்சியாளர் வசமானது சிரியா: ஜனாதிபதி ஆஸாத் தப்பியோட்டம்!





சிறைக்கைதிகளும் கிளர்ச்சியாளர்களால் விடுவிப்பு

மத்திய கிழக்கு நாடான சிரியாவில் ஜனாதிபதி ஆஸாத்தின் ஆட்சியை முடிவுக்கு கொண்டுவருவதாக சூளுரைத்த கிளர்ச்சியாளர்கள் நேற்று காலை, சிரியாவின் தலைநகர் டமஸ்கஸுக்குள் நுழைந்ததை பகிரங்கமாக அறிவித்தனர்.

2011 ஆம் ஆண்டுக்கு பிறகு சிரியாவில் மீண்டும் உள்நாட்டு போர் வெடித்ததையடுத்து சிரிய ஜனாதிபதி பஷர் அல் அஸாத் ஆட்சியை எதிர்த்து யாத் தஹ்ரிர் அல் ஹாம் என்ற கிளர்ச்சியாளர்கள் அமைப்பு கடந்த வாரம் முதல் இராணுவத்துடன் மீண்டும் சண்டையை ஆரம்பித்தனர்.

இதைத் தொடர்ந்து அரச கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகள் முழுவதும் கிளர்ச்சியாளர்கள்

02 →

## சதொச: 02 இலட்சம் தேங்காய்கள் தினமும் விற்பனை



**பாலகணேஷ் டிலுக்ஷா**

லங்கா சதொச ஊடாக நாளாந்தம் விற்பனை செய்யப்படும் தேங்காய்களின் எண்ணிக்கை இன்று திங்கட்கிழமை (09) முதல் இரண்டு இலட்சமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

02 →

## காலம் கடந்த ஞானம்: மாவடிப்பள்ளியில் வெள்ள அளவை காட்டும் தூண்கள்



**முகம்மட் முக்தார்**

காரைதீவு பிரதேச செயலகத்திற்குட்பட்ட மாவடிப்பள்ளி தாம்போதியில் வெள்ளநீர் மட்டத்தைக் காட்டும் வகையிலான அடையாள கொங்கிறீட் தூண் இடும் வேலைகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொண்டு வருகிறது.

மழைக்காலங்களில் இந்த தாம்போதியூடாக பாயும் வெள்ள நீரின் அளவை கணக்கிட முடியாத

02 →

## நிர்ணய விலையில் அரிசியை விற்க முடியாதென வியாபாரிகள் அடம்பிடிப்பு

### நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் நேற்று திடீர் சுற்றுவளைப்பு

**பாலகணேஷ் டிலுக்ஷா**

அரசாங்கம் நிர்ணயித்துள்ள அதிகபட்ச சில்லறை விலையின் கீழ் அரிசியை விற்பனை செய்ய முடியாது என வியாபாரிகள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

வர்த்தக,வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் அரிசி வியாபாரிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது அரிசிக்கான புதிய அதிகபட்ச சில்லறை விலையை அரசாங்கம் நிர்ணயித்தது.

இதன்படி, சந்தையில் நாடு, சம்பா மற்றும் சிவப்பு அரிசியின் அதிகபட்ச சில்லறை விலை 10 ரூபாவால்

02 →



## கரடியனாறு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கைது

**கனகராசா சரவணன்**

செங்கலடி- கரடியனாறு பிரதான வீதி காயங்குடா பகுதியில் வீதியில் நடந்து சென்ற பாதசாரி மீது கரடியனாறு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஓட்டிச் சென்ற ஜீப்வண்டி மோதிய சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் சனிக்கிழமை ((07) இரவு 10 மணி அளவில் நடந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக, கரடியனாறு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி

02 →

## மாணவர்களுக்கு தைத்த சீருடைகளை வழங்க அரசு திட்டம்



சீருடைத்துணி விரயமாவதைக் குறைக்கும் நோக்கில் அடுத்த ஆண்டு முதல் மாணவர்களுக்குத் தைக்கப்பட்ட சீருடைகளை வழங்கத் திட்டமிட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

மாணவர்களின் சீருடைகளுக்காக துணிகள் வழங்குவதற்குப் பதிலாக

02 →

## யாழ். கற்கோவளம் இராணுவ முகாம் மக்களிடம் கையளிப்பதில் தாமதம்

**பு. கஜிந்தன்**

யாழ்ப்பாணம், பருத்தித்துறை - கற்கோவளம் இராணுவ முகாமிலுள்ள இராணுவத்தினர் இன்னும் முழுமையாக வெளியேற வில்லையெனவும் இதனால் அக்காணி தொடர்ந்து இராணுவம் வசமே உள்ளதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தனியார் காணியில் அமைந்துள்ள இந்த இராணுவ முகாமிலிருந்து

02 →



## ஆவா குழுவின் முக்கிய புள்ளி கனடாவில் கைது

### பிரான்சுக்கு நாடு கடத்தத் திட்டம்

**ஆர்.மனோசங்கர்**

இலங்கையின் வடபகுதியை மையமாகக் கொண்ட 'ஆவா குழு' எனப்படும் குற்றக் கும்பலின் தலைவன் என நம்பப்படும் இலங்கை பிரஜை ஒருவர் கனடாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அஜந்தன் சுப்ரமணியம் என்று அழைக் கப்படும் 32 வயதான பிரசன்னா நல்லலிங்கம் என்பவரே டொரான்டோவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், கொலைக் குற்றச்



சாட்டுக்களை எதிர்கொண்டுள்ள சந்தேக நபர் பிரான்சுக்கு நாடுகடத்தப்படவுள்ளதாக கனடா பொலிஸாரை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

02 →

## அக்கரைப்பற்று - கல்முனை பிரதான வீதி இன்று முதல் போக்குவரத்துக்கு அனுமதி



**சுலைமான் றாபி**

வெள்ளப்பெருக்கினால் சேதமடைந்த அக்கரைப்பற்று -கல்முனை (நிந்தவூர்) பிரதான வீதியில் புதிய இரும்புப் பாலம் ஊடாக மாற்று வழிப்பாதை அமைக்கப்பட்டு, இன்று (09) முதல் சீரான போக்குவரத்து இடம்பெறவுள்ளதாக மாகாணப் பணிப்பாளர் எம்.பி. அலியார் தெரிவித்தார்.

02 →

## உப்புக்கும் தட்டுப்பாடு: இறக்குமதி செய்வது தொடர்பில் ஆராய்வு



**பாலகணேஷ் டிலுக்ஷா**

இலங்கையில் உப்பு உற்பத்தி குறைவது தொடர்பில் ஆராய்ந்து வருவதாக வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

02 →

## வடக்கில் தமிழ் தேசிய கட்சிகளுடன் சுவிஸ் தூதரக அதிகாரிகள் சந்திப்பு

**கி.வசந்தன்**

தேசிய இனப்பிரச்சினை தீர்வு மற்றும் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பில் தமிழ்த் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகளை சுவிஸ் தூதரக அதிகாரிகள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

02 →



# மாவடிப்பள்ளி விபத்தில் மரணமடைந்த மாணவர்களின் குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் ரூபா நிதி உதவி

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இலங்கை வக்பு சபை மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆகியன இணைந்து முஸ்லிம் தரும நம்பிக்கை நிதியத்திலிருந்து (MCF) தலா ஒரு லட்சம் ரூபாய் வீதம் அனைவரையும் மீளாத்துயரில் ஆழ்த்திய மாவடிப்பள்ளி விபத்தில் மரணமடைந்த மத்ரஸா மாணவர்களின் குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

மாவடிப்பள்ளி விபத்தில் உயிரிழந்த மத்ரஸா மாணவர்களின் மரணமானது, முழு நாட்டு மக்களையுமே மீளாத்துயரில் ஆழ்த்தியது.

இவ்வாறான இள வயது மரணங்கள் என்பது பெற்றோர்களையும் உறவினர்களையும் மிகவும் கவலைக்குட்படுத்தக் கூடிய விடயமாக மாறியுள்ளதனால் அவர்களுக்கு இவ் இழப்பின் வலியை தாங்குகின்ற மன தைரியத்தை இறைவன் கொடுக்க வேண்டும் என்றும், உயிரிழந்த அனைவருக்கும் ஜன்னத்துல் பிர்தவ்ஸ் எனும் உயர்ந்த சுவனம் கிடைக்க வேண்டுமென்றும் அதற்காக பிரார்த்தனை செய்யுமாறும் திணைக்களம் வேண்டிக் கொள்கின்றது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### கிளர்ச்சியாளர் வசமானது...

குழுவின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. இதன் மூலம் அஸாத் குடும்பத்தின் 50 ஆண்டுகால ஆட்சி சிரியாவில் முடிவுக்கு வந்தது. கிளர்ச்சியாளர்கள் குழு டமஸ்கஸ்ஸில் நுழைந்ததையடுத்து ஜனாதிபதி பஷர் அல் அஸாத் நாட்டை விட்டு விமானத்தில் தப்பியோடி விட்டதாக தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில் டமஸ்களைக் கைப்பற்றி விட்டதாக கிளர்ச்சியாளர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை அறிவித்தனர். தலைநகரை விட்டு அரச படைகள் வெளியேறி விட்டதால், நீண்டகால ஆட்சியாளரான அஸாத்தின் ஆட்சியிலிருந்து சிரியா விடுவிக்கப்பட்டிருப்பதாக கிளர்ச்சியாளர்கள் தெரிவித்தனர்."பஷர் அல் அஸாத் தப்பியோடிவிட்டார். ஆஸாத்தின் கொடுங்கோல் ஆட்சியில் இருந்து டமஸ்கஸ் விடுவிக்கப்பட்டது என்று நாங்கள் அறிவிக்கிறோம்" என்று கிளர்ச்சியாளர்கள் தெரிவித்தனர். இதனிடையே, கடந்த 24 வருடங்களாக சிரியாவை ஆட்சி செய்த ஜனாதிபதி பஷர் அல் ஆஸாத், விமானத்தில் ஏறி அடையாளம் தெரியாத இடத்துக்கு சென்று விட்டதாக சர்வதேச செய்தி நிறுவனத்திடம் உயர் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். அஸாத்தின் ஆட்சி கவிழ்ந்து விட்டதாக இராணுவத் தளபதி, அதிகாரிகளிடம் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

டமாஸ்களின் சர்வதேச விமானநிலையத்தில் இருந்து சிரியாவின் பாதுகாப்பு படையினர் பின்வாங்கி விட்டதாகவும், கிளர்ச்சியாளர்களின் தொடர் தாக்குதல்கள் காரணமாக இராணுவத்தினரும், அதிகாரிகளும் விமானநிலையத்தை விட்டு வெறியேறி விட்டதாகவும், பிரிட்டனை அடிப்படையாகக் கொண்ட மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பகம் என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

வடக்கு டமாஸ்கஸில் உள்ள சைட்னாயா இராணுவச் சிறைக்குள் நுழைந்து கைதிகளை விடுவித்ததாக கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். அவர்கள் கூறுகையில், "எங்களின் கைதிகளை சிறைகளில் இருந்து விடுவித்து,அநீதியின் சகாப்தம் முடிவுக்கு வந்து விட்டது என்ற செய்தியினை அறிவிக்கும் சந்தோஷத்தை நாங்கள் எங்கள் சிரிய மக்களுடன் இணைந்து கொண்டாடுகிறோம்" என்று தெரிவித்தனர்.

கடந்த நவம்பர் 27ஆம் திகதி, சிரியாவின் இரண்டாவது மிகப் பெரிய நகரமான அலெப்போவில் இருந்து அரச படைகள் விரைவாக வெளியேறியதால், அந்த நகரை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றினர். இதைடுத்து, கடந்த வியாழக்கிழமை ஹோமா நகரையும், வெள்ளிக்கிழமை சிரியாவின் மூன்றாவது பெரிய நகரமான ஹாம்ஸ் நகரையும் கைப்பற்றினர். ஒரு வாரகாலத்தில் கிளர்ச்சியாளர்களின் கை வேகமாக ஓங்கி நேற்று தலைநகர் டமாஸ்கஸ/ம் கிளர்ச்சியாளர்கள் வசமாகியது.

தற்போது தலைநகர் டமாஸ்கஸூம் கிளர்ச்சியாளர்கள் வசமாகியிருக்கும் நிலையில், 14 மாகாண தலைநகரங்களில், லடாகிய மற்றும் டார்டஸ் ஆகிய நகரங்கள் மட்டுமே அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன. சிரியா கடந்த 5 தசாப்தங்களுக்கும் மேலாக ஆஸாத்தின் குடும்பத்தால் ஆளப்பட்டு வருகிறது. தனது தந்தை ஹஃபிஸ் ஆஸாத்தின் மரணத்தை தொடர்ந்து, பஷர் அல் ஆஸாத் சிரியாவின் அதிகாரத்துக்கு வந்தார். மத்திய கிழக்கு பகுதிகளில் ஏற்பட்ட அரபு வசந்தங்களால் ஈர்க்கப்பட்ட நிலையில் சிரியாவில் கடந்த 2011-ம் ஆண்டு முதல் ஆஸாத்துக்கு எதிரான எதிர்ப்பு நிலவி வருகிறது. ஜனாதிபதி ஆஸாத்தின் ஒடுக்குமுறைக்கு எதிராக எழுந்த அந்த அலை உள்நாட்டுப்போராக விரிவடைந்தது.

### சதோச: 02 இலட்சம்...

இதன்படி, கொழும்பு உள்ளிட்ட நகர்ப்புறங்களில் உள்ள சதொச ஊடாக தேங்காய் ஒன்றினை 130 ரூபாய்க்கு கொள்வனவு செய்ய முடியும்.

தற்போது சதொச ஊடாக ஒரு இலட்சம் தேங்காய்கள் விற்பனை செய்யப்படும் நிலையில் இன்று முதல் அதனை இரண்டு இலட்சமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு சொந்தமான தோட்டங்களில் விளையும் தேங்காய்கள் லங்கா சதொச ஊடாக நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படுவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பண்டிகைக் காலங்களில் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை தட்டுப்பாடின்றி வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### மாவடிப்பள்ளியில் வெள்ள...

நிலை காணப்பட்டது. அண்மையில் அம்பாறை மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற அனர்த்த முகாமைத்துவ கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

அண்மையில் இத்தாம்போதியூடாக பாய்ந்த வெள்ளத்தில் உழவு இயந்திரம் ஒன்று வீதியை விட்டு விலகி வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டதால் உழவு இயந்திரத்தில் பயணித்த 06 மத்ரஸா மாணவர்களும் 04 பொதுமக்களுமாக 10 பேர் நீரில் அள்ளுண்டு உயிரிழந்தனர்.

### மாணவர்களுக்கு...

தைத்த சீருடைகள் வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார். மாணவர்களுக்கு தனித்தனியாக வெட்டப்பட்ட சீருடைத்துணி வழங்கும் போது, வழங்கப்படும் துணிகளின் மேலதிக துணி வீண் விரயமாகின்றது. அவ்வாறே சீருடைத்துணி கிடைப்பதற்கு முன்னர் பெற்றோர் கடைகளில் சீருடைகளை கொள்வனவு செய்வதால் சீருடைத்துணி வீணே வீட்டில் கிடக்கின்றது. இதனைத் தடுப்பதற்கு தைத்த சீருடைகள் வழங்குவது சிறந்த யோசனை எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் கைத்தறி ஆடைகள் தற்போது நவீன ஆடையலங்காரமாகவும் விலையுயர்ந்த ஆடைவகைகளாகவும்மாறியுள்ளன.எனினும்அவற்றை உற்பத்தி செய்வோரின் வருமானம் அதிகரித்தாக தெரியவில்லை. அதற்கு முறையான சந்தைப்படுத்தல் கிடைக்கவில்லை என்பதே காரணமாகும். எனவே தேசிய கைத்தறி உற்பத்திக்கு சிறந்த சந்தை வாய்ப்பை வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

### அக்கரைப்பற்று - கல்முனை...

இரும்பு பாலம் ஊடாக கனரக வாகனங்கள் செல்ல முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த வாரம் இந்தப் பகுதிக்கு விஜயம் செய்த வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் ரி. பாஸ்கரனின் அறிவுறுத்தியிருந்தார். அதற்கமைய, இந்தப் பாலத்தினை புனரமைக்கும் பணிகள் அக்கரைப்பற்று மேலதிக மாகாண பணிப்பாளர் எம்.பி அலியாரின் விசேட கண்காணிப்பின் கீழ், கடந்த இரு வாரங்களாக இடம்பெற்று வந்தன.

இந்நிலையில் நேற்றைய தினம் (08) குறித்த பகுதிக்கு விஜயம் செய்த அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம, நிலைமைகளைப் பார்வையிட்டார்.

இந்த விஜயத்தில் பிரதம பொறியியலாளர் ரி. சிவசுப்ரமணியம், கல்முனை நிறைவேற்றுப் பொறியியலாளர் இஷட்.ஏ. எம் அஸ்மிர் உள்ளிட்ட அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

### உப்புக்கும் தட்டுப்பாடு:...

இலங்கையில் கடந்த வருடமும் இந்த வருடமும் உப்பு உற்பத்தி குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் உடனடியாக ஆய்வு செய்து தீர்வு காண நடவடிக்கை எடுப்பதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கடந்த வருடமும் இந்த வருடமும் உப்பு உற்பத்தி 40 வீதத்தால் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது உள்நாட்டில் உற்பத்தி குறைவடைந்துள்ள நிலையில், இதற்குத் தீர்வாக உப்பை இறக்குமதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு உப்பு நிறுவனங்கள் அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பான கோரிக்கை தொடர்பில் வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் உள்ள உப்பு இருப்பு மற்றும் நுகர்வுக்குத் தேவையான அளவு ஆகியவற்றை ஆய்வு செய்து இறக்குமதி தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், உப்பை இறக்குமதி செய்வது தொடர்பில் இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

### வடக்கில் தமிழ்...

இந்த சந்திப்பானது யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் (07) இடம்பெற்றது.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பில் தமிழர் தரப்பின் நிலைப்பாடு தொடர்பிலும், புதிய அரசாங்கத்துடன் நடைபெறக்கூடிய பேச்சுவார்த்தைகள் தொடர்பிலும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இச்சந்திப்பில் சுவிஸ் நாட்டின் வெளிநாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவி செயலாளரும், சமாதானம் மற்றும் மனித உரிமைகள் பிரிவின் தலைவருமான ரிம் எண்டர்லின், இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் சிரி வோல்ற், இலங்கைக்கான சுவிஸ் தூதரகத்தின் மனிதப் பாதுகாப்பிற்கான முதன்மைச் செயலாளர் ஜெஸ்ரின் பொய்லற், சுவிஸ் தூதரகத்தின் மூத்த தேசிய திட்ட அதிகாரி சுசந்தி கோபாலகிருஸ்ணன் உள்ளடங்கிய குழுவினர் தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினர்.

இதில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், ப.சத்தியலிங்கம், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் பங்கு பற்றியிருந்தனர்.

### ஆவா குழுவின் ...

2022 செப்டம்பரில் பிரான்சில் அபிராமன் பாலகிருஷ்ணன் என்பரை கொலை செய்தமை மற்றும் இன்னுமொரு நபரை கொலை செய்ய முயன்றது தொடர்பாக பிரசன்னாவை நாடு கடத்தவுள்ளதாக கனடாவின் நீதித்துறை உறுதி செய்தது.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர் இலங்கையின் வடக்கு மாகாணத்தில் செயல்படும் சட்டவிரோத மோட்டார் சைக்கிள் கும்பலான ஆவா எனப்படும் குற்றக் குழுவின் தலைவர் என்று நம்பப்படுகிறது.

ஆவா, LC Boys இன் போட்டியாளர்களாக அறியப்பட்ட ஒரு குழுவைக் குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிரான்ஸ் ஊடக அறிக்கையின்படி, பாரிஸின் வடக்கு புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ள லா கோர்னேவ் என்ற கம்யூனின் கட்டுப்பாட்டில் இரு குழுக்களும் பல ஆண்டுகளாக மோதலில் ஈடுபட்டுள்ளன.

2022ஆம் ஆண்டு செப்டம்பர் 21ஆம் திகதி லா கோர்னியூவில் வாகனத்திலிருந்த இருவரை நல்லலிங்கம் மற்றும் ஐந்து கூட்டாளிகள் தங்கள் முகங்களை மறைத்துக்கொண்டு கூரிய ஆயுதங்களைக் கொண்டு தாக்கியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பாலகிருஷ்ணன் மற்றும் இரண்டாவது நபர் மீதான தாக்குதலில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. இதில் பாலகிருஷ்ணன் உயிரிழந்ததுடன், இரண்டாவது நபர் உயிர் பிழைத்ததாக பிரான்ஸ் நீதிமன்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

நீதிமன்றத் தாக்கல்களின்படி, அவர் நீண்ட காலத்திற்குப் பிறகு நாட்டை விட்டுத் தப்பிச் சென்றதாகவும், இதனையடுத்து சர்வதேச பொலிஸாரின் பிடியாணை பிறப்பிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

அந்த நேரத்தில் பிரசன்னா ஏற்கனவே பிரான்ஸ் அதிகாரிகளுக்குத் தெரிந்த ஒருவராவார். 2019 இல் "வன்முறைச் செயல்களுக்காக" அவருக்கு ஆறு மாத இடைநிறுத்தப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதாக நீதிமன்ற ஆவணங்கள் காட்டுகின்றன.

பிரசன்னா டிசம்பர் 2022 இல் அமெரிக்காவிலிருந்து கனடாவிற்குள் நுழைந்தார்.

பதிவுகளின்படி, கியூபெக்கில் உள்ள ரோக்ஸ்ஹாம் சாலை சோதனைச் சாவடியில் ஒரு பொய்யான பெயரைப் பதிவு செய்து சட்டவிரோதமான முறையில் நாட்டிற்குள் நுழைந்துள்ளார். எவ்வாறாயினும், அவர் எப்படி அமெரிக்காவுக்குள் நுழைந்தார் என்பது தெரியவில்லை.

இந்த ஆண்டு மே மாதம் வரை, பிரசன்னா அகதிகள் அனுமதி விசாரணைக்கு ஆஜராகத் தவறியதால், டொராண்டோ பொலிஸ் சேவையின் உதவியுடன் கனடா எல்லைச் சேவை முகவரால் கைது செய்யப்பட்டார்.

அவரைக் காவலில் எடுத்ததும், அதிகாரிகள் சர்வதேச பொலிஸாரின் கோப்பில் வழங்கப்பட்ட கைரேகைகளை சோதனை செய்த போது அது பொருந்தியுள்ளது.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட அவர் தற்போது காவலில் வைக்கப்பட்டு, நாடு கடத்துவது தொடர்பான முடிவுக்காகக் காத்திருக்கிறார். அவர் மீதான விசாரணை 2025 மே மாதம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### கரடியனாறு...

கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் ஏ.எதிர்மன்ன இடமாற்றம் பெற்றுச் செல்கின்றதையடுத்து, அவருக்கு இரவு போசனம் வழங்கி பிரியாவிடை செய்யும் நிகழ்வு பாசிக்குடாவில் உள்ள ஹோட்டல் ஒன்றில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றது. இதில், மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் கலந்து கொண்டனர்

கரடியனாறு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அவருக்கு சொந்தமான ஜீப்வண்டியில் தனியாக சென்று நிகழ்வில் கலந்து கொண்டு இரவு 10.00 மணி அளவில் மீண்டும் கரடியனாறு பொலிஸ் நிலையத்துக்கு திரும்பிக் கொண்டிருந்தபோது காயங்குடா பகுதியில் பிரதான வீதியில் நடந்து சென்ற ஒருவர் மீது ஜீப்வண்டியை மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவத்தில், பாதசாரி படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அவசர பிரிவில் அனுமதிக்கப்பட்டார். வாகனத்தை ஓட்டிச் சென்ற பொலிஸ் பொறுப்பதிகாரி செங்கலடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (8) காலை சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளார்.

இந்த நிலையில், குறித்த விபத்து தொடர்பாக கரடியனாறு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### நிர்ணய விலையில்...

அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், கீரிசம்பாவின் விலையில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை.

மேலும் நாடு அரிசி ஒரு கிலோ கிராமின் மொத்த விலை 225 ரூபாவாகவும் சில்லறை விலை 230 ஷரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டதுடன் வெள்ளை அரிசி ஒரு கிலோ கிராமின் மொத்த விலை 215 ரூபாவாகவும் சில்லறை விலை 220 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டது.

அத்துடன் இறக்குமதி செய்யப்படும் நாடு அரிசி ஒரு கிலோ கிராம் 220 ஷரூபாவாக நிர்ணயிக்கப்பட்டதுடன் சம்பா அரிசியின் மொத்த விலை 235 ஷரூபாவாகவும் சில்லறை விலை 240 ரூபாவாவும் விலை நிர்ணயிக்கப்பட்டது.

மேலும் கீறி சம்பா அரிசி ஒரு கிலோ கிராமின் மொத்த விலை 255 ரூபாவாகவும் சில்லறை விலை 260 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டது.

இதேவேளை, சந்தையில் இன்னும் அரிசிக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும், புதிய அதிகபட்ச சில்லறை விலையில் அரிசியை விற்பனை செய்ய முடியாது எனவும் வியாபாரிகள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

அரசாங்கம் விலையை அதிகரிப்பதை விட விதிமுறைக்கு உட்பட்டு அரிசி விற்பனை செய்வது தொடர்பாக ஆராய விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளையே மேற்கொண்டிருக்க வேண்டும் என சிறு மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் யூ.கே. சேமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனால் அரசாங்கத்தின கட்டளைக்கு எதிராக செயற்படும் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துமாறும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

அதேபோல் நாளாந்தம் அரிசி ஆலைகளிலிருந்து வெளிவரும் அரிசியின் அளவினைக் கணக்கிடுமாறும் நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய பொலன்னறுவை பகுதியில் உள்ள அரிசி ஆலைகள் நேற்று விசேட சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய எதிர்காலத்தில் அனைத்து அரிசி ஆலைகளின் தகவல்களையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அந்த அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரகோன் தெரிவித்தார்.

மேலும் அரிசி ஆலைகளில் நாளாந்தம் உற்பத்தி செய்யப்படும் மொத்த அரிசியின் அளவு, தற்போதைய கையிருப்பு மற்றும் சந்தைக்கு வெளியிடப்படும் அரிசியின் அளவு என்பன தொடர்பில் அறிக்கை பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாகவும் நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரகோன் தெரிவித்துள்ளார்.

மறுபுறம் அரிசி தட்டுப்பாட்டால் பொது மக்களும் பாரிய சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர். நாட்டின் பல பகுதிகளில் அரிசிக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக நுகர்வோர் குற்றம் சுமத்துகின்றனர்.

அத்துடன், சதொச ஊடாக அரிசியை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும்

அரிசி மற்றும் தேங்காய் கையிருப்பில் இல்லை என தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, தங்களது மாதாந்த நுகர்வு பொருட்களுக்கான செலவில் அதிகளவாகப் பங்கினை அரிசிக்காகச் செலவிட வேண்டியுள்ளதாகவும் நுகர்வோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி அடுத்த வாரம் நாட்டிற்கு வரும் என அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. அரிசியை இறக்குமதி செய்யுமாறு அரசாங்கம் வழங்கிய அறிவுறுத்தல்களுக்கமைய, இறக்குமதியாளர்கள் ஏற்கனவே அரிசி இறக்குமதிக்கு முன்பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியா மற்றும் பாகிஸ்தானிலிருந்து அரிசி தொகை முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அடுத்த வாரத்திற்குள் அது நாட்டிற்கு கிடைக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் அரிசி தட்டுப்பாட்டுக்கு தீர்வாக இறக்குமதியாளர்களுக்கு நேரடியாக அரிசியை இறக்குமதி செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி அரிசி மீது விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி வரி திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, டிசம்பர் மாதம் 04 ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை அரிசி இறக்குமதி செய்வதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தலையும் அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

### யாழ். கற்கோவளம் இராணுவ...

இராணுவத்தினரை உடன் வெளியேறுமாறு, இராணுவத் தலைமையகத்தால் உத்தர விடப்பட்ட போதிலும் அது இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

அமைச்சரவை பொறுப்பேற்று சில மணிநேரங்களில், பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் தனியார் காணியில் அமைந்துள்ள இராணுவ முகாமிலிருந்து 14 நாட்களுக்குள் படையினர் வெளியேற வேண்டும் என்ற உத்தரவு இராணுவத் தலைமையகத்தால் பிறப்பிக்கப்பட்டது.

எனினும், 14 நாட்களுக்கு மேலாகியும், இந்த முகாம் இராணுவத்தினரின் பிடியிலிருந்து விடுவிக்கப்படவில்லை.

எனவே, வாக்குறுதி வழங்கி மக்களை ஏமாற்றாது, அங்கிருந்து படையினர் உடனடியாக வெளியேற வேண்டும் என்று பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த காலங்களில் குறித்த காணியை சுவீகரிக்கும் வகையில் நில அளவீடு செய்வதற்குப் பல தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் மக்களின் எதிர்ப்பால் அவை கைவிடப்பட்டன.

## ஐக்கிய மக்கள் கூட்டணியில்

# தொடரும் தேசியப் பட்டியல் சர்ச்சை?

(கனுஷியா புஷ்பகுமார்)

ஐக்கிய மக்கள் சக்தியில் நாடாளுமன்றத் தேர்தலில் இணைந்து போட்டியிட்ட அரசியல் கட்சிகளுக்கு வாக்குறுதி வழங்கியபடி, தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை வழங்கவில்லையெனில், குறித்த கட்சிகள் எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது தொடர்பில் அக்கட்சிகள் அவதானம் செலுத்தியுள்ளதாக தெரியவந்துள்ளது.

ஐக்கிய மக்கள் கூட்டணியாக சுதந்திர மக்கள் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட சில கட்சிகள் செயற்படுகின்றன.

ஐக்கிய மக்கள் சக்திக்குக் கிடைத்த ஐந்து தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆசனங்களில் ஒன்றிற்கு அக்கட்சியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார நியமிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய நான்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளும் இதுவரையில் யாருக்கும் வழங்கப்படவில்லை.

கூட்டணியில் போட்டியிட்ட கட்சிகளுக்கு வாக்குறுதியளித்தபடி ஆசனங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும், அக்கட்சியின் தோற்கடிக்கப்பட்ட உறுப்பினர்களை தேசியப்பட்டியலில் நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையுமே இந்த தாமதத்திற்கான காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் தேசியப் பட்டியலில் மூன்றிலிருந்து ஐந்தாம் இடம் வரையில் சுதந்திர மக்கள் காங்கிரஸின் டலஸ் அழகப்பெரும, தமிழ் முற்போக்கு கூட்டணியின் சாகரன் விஜயேந்திரன் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிசாம் காரியப்பர் ஆகிய வேட்பாளர்கள் உள்ளனர்.

அந்த பட்டியலில் முதல் இரண்டு வேட்பாளர்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார் ஆகியோர் ஆவர்.

# அத்தியாவசிய மருந்துகளுக்கு மீண்டும் தட்டுப்பாடு...?



அரசாங்க வைத்தியசாலைகளில் வரும் 2025 ஆம் ஆண்டில் அத்தியாவசிய தடுப்பூசிகள் உள்ளிட்ட மருந்துகளுக்கு மீண்டும் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்தியர் சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான முறையான கொள்முதல் நடைமுறையை பின்பற்றாததன் காரணமாக இந்த நிலைமை ஏற்படக்கூடும் என அதன் செயலாளர் வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும், முன்னர் வைத்தியசாலைகளில் சுமார் 300 மருந்துகளுக்குத் தட்டுப்பாடு காணப்பட்ட போதிலும், தற்போது அதனைக் குறைக்க முடிந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

# திகாமடுல்ல வாக்காளர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு பாரிய மோசடி

## நீதிக்கான போராட்டம் தொடரும் என்கிறார் அதாவுல்லா

(துர்மேந்திரா)



நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் வாக்காளர்களின் உரிமைகள் திட்டமிடப்பட்ட வகையில் மறுக்கப்பட்டதுடன் வாக்குகள் எண்ணப்பட்டதிலும் பாரதூரமான மோசடிகள் இடம்பெற்றுள்ளன என தேசிய காங்கிரஸ் தலைவரும், புதிய ஜனநாயக முன்னணியின் முதன்மை வேட்பாளருமான முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்தார்.

தேசிய காங்கிரஸின் தலைமை காரியாலயமான அக்கரைப்பற்று – கிழக்கு வாசலில் சனிக்கிழமை மாலை விசேட ஊடகவியலாளர் மாநாடு நடத்தி இவர் இது தொடர்பாக தெரிவித்தவை வருமாறு:–

நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தல் காலத்தில் வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டது முதல் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுகின்ற வரையில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் தேசிய காங்கிரஸையும், தேசிய காங்கிரஸ் செயற்பாட்டாளர்கள், ஆதரவாளர்கள் மற்றும் வாக்காளர்கள் ஆகியோரையும் இலக்கு வைத்து அடாவடிகள் மேற்கொள்ளப்பட்டன.

தேசிய காங்கிரஸின் வெற்றியை முடக்குகின்ற செயற்பாடுகள் முடுக்கி விடப்பட்டன. அக்கரைப்பற்றில் பாரதூரமான பிரச்சினைகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதாக காண்பிக்கப்பட்டு தேர்தல் கண்காணிப்பு என்ற போர்வையில் விசேட பொலிஸ் குழு ஒன்று மேலதிகமாக கடமையில் ஈடுபடுத்தப்பட்டது. எமது தேர்தல் பிரசார கூட்டங்களுக்கு கண்காணிப்பு என்கிற போர்வையில் வந்து இடையூறுகளை மேற்கொண்டனர். நிறைவு பிரசார கூட்டத்தின்போது கூட்டத்தை முழுமையாக நடத்த விடாமல் தடுத்தனர்.

கச்சேரியில் காலையில் ஒரு விதமாகவும், பின்னர் வேறு ஒரு விதமாகவும் முடிவுகள் அறிவிக்கப்படலாயின. நாம் திகாமடுல்ல தேர்தல் மாவட்ட முடிவுகளை ஏற்று கொள்ளவில்லை. ஏற்பதாக கையொப்பம் இட்டு கொடுக்கவில்லை. வெளிப்படையாகவே ஆட்சேபித்தோம்.

ஆனால் புதிய ஜனநாயக முன்னணி 88 வாக்குகளால் தோற்றதாக அறிவிக்கப்பட்டது. நாம் வாக்குகள் எண்ணப்பட வேண்டும் என்று சட்டபடி முறையாக கச்சேரியில் கோரினோம். ஆனால் வாக்குகளை மீண்டும் எண்ணப்படவே இல்லை. இதை ஆட்சேபித்து கொழும்பில் தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளோம். தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் எழுத்துமூலம் பல தகவல்களையும் திரட்டியுள்ளோம்.

அவசியம் ஏற்படுகின்ற பட்சத்தில் உயர்நிலை நீதிமன்றங்களில் வழக்கு நடவடிக்கைகளை நிச்சயம் மேற்கொள்வோம். நீதிக்கான எமது போராட்டம் தொடரும். நாம் கடந்த காலங்களில் அரசியலில் பல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வெற்றி கண்டிருக்கின்றோம். எனவே தேசிய காங்கிரஸ் செயற்பாட்டாளர்கள், ஆதரவாளர்கள் மற்றும் வாக்காளர்கள் கலங்கத் தேவையில்லை. எத்தனை இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டும்கூட மக்கள் தேசிய காங்கிரஸுடன் ஒன்றித்து நிற்கின்றனர் என்பது நிரூபணமாகி இருக்கின்றது என தெரிவித்தார்.

## தூர நோக்கற்ற செயல்பாடுகளே இன்றைய தேங்காய் தட்டுப்பாட்டுக்கு காரணம்:

(எஸ்.கீதபொன்கலன்)



தென்னந்தோட்டங்களை அளித்து குடியேற்றங்களை அமைப்பதற்குக் காணி வழங்கிய,தூர நோக்கற்ற கடந்த அரசாங்கங்களின் முடிவுகளே இன்றைய தேங்காய் தட்டுப்பாட்டின் மூல காரணம் என வெளிநாட்டலுவல்கள் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்ரா கூறினார்.

திருகோணமலையில் நேற்று(8) நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய பிரதி அமைச்சர் மேலும் கூறுகையில்,

இரசாயன உரப்பயன்பாடு தொடர்பில் கடந்த அரசு மேற்கொண்ட யதார்த்தமற்ற முடிவுகள் மற்றும் தென்னஞ் செய்கையாளர்களுக்கான மானியங்கள் முறையாக வழங்கப்படாமை என்பன தெங்கு உற்பத்தி வீழ்ச்சி அடைந்தமைக்கான பிரதான காரணங்களாகும்.எனவே இவற்றை மிக விரைவில் சீர் செய்ய வேண்டிய பாரிய பொறுப்பு எமது புதிய அரசாங்கத்தின் மீது சுமத்தப்பட்டுள்ளது. அந்த விடயத்தைக் கவனத்தில் கொண்டு உரிய செயல் முறைகளை நாம் மேற்கொள்வோம் என்று அவர் கூறினார்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் கார்த்திகை மாதம் 24ஆம் நாள் திங்கட்கிழமை

**மேஷம்:** இன்று ஆன்மீக காரியங்களில் ஈடுபடுங்கள்.

**ரிஷபம்:** இன்று மகிழ்ச்சியும் சந்தோஷமும் கிடைக்கும்.

**மிதுனம்:** இன்று உங்களிடம் அதிர்ஷ்டம் காணப்படும்.

**கடகம்:** தடைகளை சமாளித்து நன்மை காண நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

**சிம்மம்:** நீங்கள் உணர்ச்சி வசப்பட்டு சமநிலை இழப்பீர்கள்.

**கன்னி:** உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

**துலாம்:** உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**விருட்சிகம்:** இன்று உங்கள் செயல்களை மேற்கொள்வதில் தாமதங்கள் காணப்படும்.

**தனுசு:** இன்று உங்கள் வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும்.

**மகரம்:** இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

**கும்பம்:** சவால்களை எதிர்கொண்டு வெற்றி பெறும் நாள்.

**மீனம்:** மதிப்பு மிக்க பொருட்களை பத்திரமாக பார்த்துக் கொள்ள வேண்டும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** சப்தமி திதி காலை 07:52 AM அதன் பிறகு அஷ்டமி திதி.
**நட்சத்திரம்:** சதயம் நட்சத்திரம் மதியம் 02:37 PM அதன் பிறகு பூரட்டாதி நட்சத்திரம்.
**யோகம்:** சித்த யோகம்.
**சந்திராஷ்டமம் நட்சத்திரம்:**
**சூலம்:** மேற்கு.
**இராகு காலம்:** மாலை 04:30 PM முதல் 06:00 PM வரை,
**குளிகை:** மதியம் 03:00 PM முதல் 04:30 PM வரை,
**எமகண்டம்:** மதியம் 12:00 PM முதல் 01:30 PM வரை,

## கெச்சிமலையில் பிரார்த்தனை



(பீ.எம் முக்தார்)

பேருவளை கெச்சிமலை தர்காவில் வருடாந்த புனித ஸஹீஹுல் புஹாரி – முஸ்லிம் மற்றும் மஷ்ரவுர்ரவி ஹதீஸ் கிரந்தங்களில் பாராயண மஸ்லிஸின் தமாம் வைபவம் நேற்று நடைபெற்றது.

சங்கைக்குரிய அஷ்ஷெய்ஹ். மௌலவி ஸக்கி அஹ்மத் (அஷ்ரபி) பின் அஷ்ஷெய்ஹ். காலிப் அலவி அலவிய்யத்துல் காதிரி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நாட்டின் சாந்தி, சமாதானம், இனங்களுக்கிடையிலான ஐக்கியத்திற்காகவும், பலஸ்தீன் மற்றும் லெபனான் நாட்டு முஸ்லிம் சகோதரர்களின் பாதுகாப்பு மற்றும் விமோசனத்திற்காகவும் இந்நிகழ்வில் துஆ பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தலில் பின்னடைவை சந்தித்தாலும் மக்களுக்கான எமது பயணம் தொடரும்

(க.கிஷாந்தன்)



"தேர்தல் காலங்களில் மாத்திரம் மக்களைத் தேடிவரும் பருவகால பறவைகள் நாம் அல்லர். வென்றாலும், பின்னடைவைச் சந்தித்தாலும் மக்களுடன் தான் இருக்கின்றோம். மக்களுக்கான எமது பயணம் தொடரும்."– என "அண்ணா சந்திரசேகரன் தொழிலாளர் முன்னணி"யின் செயலாளர் நாயகம் அனுஷா சந்திரசேகரன் தெரிவித்தார்.

அண்ணா சந்திரசேகரன் தொழிலாளர் முன்னணியின் காரியாலயம் ஹற்றன் சக்தி மண்டபத்தில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அனுஷா மேலும் கூறியதாவது,

"பொதுத் தேர்தலென்பது அநுர சுனாமியென்றே கூறவேண்டும். அந்த சுனாமியில் பிரதானக் கட்சிகளெல்லாம் அள்ளுண்டுச்சென்றன.பல வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களும் காணாமலாகினர்.அப்படி இருந்தும் நுவரெலியா மாவட்டத்தில் எனக்கு 18 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகள் கிடைத்தன. சொற்ப அளவான வாக்குகள் வித்தியாசத்திலேயே நாடாளுமன்ற ஆசனம் கைநழுவிப்போனது.

இதனை நான் தோல்வியாகக் கருதவில்லை. தற்காலிக பின்னடைவு மாத்திரமே. எனது தந்தை மீதுள்ள மதிப்பால் என்னையும் நம்பி வாக்களித்த மக்களுக்கு மிக்க நன்றிகள். என்னோடு தோளோடு தோளாக நின்று செயற்பட்ட தந்தையின் நண்பர்கள், தோழர்கள், செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள், ஆதரவாளர்கள் என அனைவருக்கும் நன்றிகள்.

அதேபோல வதந்திகளைப் பரப்பி எமக்கான வாக்குகளைக் குறைப்பதற்கான சதிகளும் முன்னெடுக்கப்பட்டன. நிச்சயம் தற்போது உண்மை என்னவென்பது அவர்களுக்குத் தெரியவந்திருக்கும். எனது தந்தை மக்களுக்காக மக்கள் அரசியலை முன்னெடுத்த தலைவர். சலுகைகளுக்காக மக்களை அடகு வைத்தது கிடையாது. எனவே, நாம் தேர்தல் காலங்களில் மாத்திரம் மக்களை தேடிவரமாட்டோம். தேர்தல் முடிந்த பிறகு ஓடிவிடவும் மாட்டோம். வென்றாலும், பின்னடைவைச் சந்தித்தாலும் மக்களுக்காக அரசியல் செய்வோம். அது மக்கள் நல அரசியலாக இருக்கும்." – என்றார்.

# தமிழர் செவ்வியல் ஆடல்- 2024









"தமிழர் செவ்வியல் ஆடல் – 2024 "–நிகழ்வு, கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் கடந்த வெள்ளி,சனி (06,07) ஆகிய தினங்களில் நடைபெற்றது. இரு தினங்களும் மிகச் சிறப்பாக நடைபெற்ற இந்த நிகழ்வின் போது பிடிக்கப்பட்ட படங்கள்....

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5,Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## ட்ரம்பின் மீள் வருகையும் ஐரோப்பிய நேட்டோ உறவும்

டொனால்ட் ட்ரம்பின் வெற்றி அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசு நாடுகளை மையப்படுத்திய பாதுகாப்புச் செலவுகள் மற்றும் அட்லாண்டிக் கடல் கடந்த உறவுகள் போன்றவற்றில் மாற்றுத் தன்மை கொண்ட மறுசிரமைப்புக்கு உட்படலாம் என்ற எதிர்பார்ப்பு உண்டு. அதேவேளை ரசிய - உக்ரெய்ன் போர், இஸ்ரேல் - காசா போர் ஒரு பாதையில் வரக்கூடிய முடிவை எட்டக்கூடிய சாத்தியப்பாடுகளும் இல்லாமலில்லை.

பலஸ்ரிக் நாடுகள் (Baltic States) அதாவது எஸ்டோனியா, லாட்வியா மற்றும் லித்துவேனியாவை உள்ளடக்கிய புவிசார் அரசியல் சொல். இந்த மூன்று நாடுகளும் நேட்டோ, ஐரோப்பிய ஒன்றியம், யூரோ மண்டலம், ஐரோப்பிய பேரவை மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பு (Organisation for Economic Co-operation and Development -(OECD) ஆகியவற்றின் உறுப்பினர்களாக உள்ளன. இந்த பலஸ்ரிக் நாடுகளுடன் ட்ரம் உறவை பலப்படுத்தலாம்.

போலந்து மற்றும் பலஸ்டிக் நாடுகள் போன்ற சில நேட்டோ உறுப்பு நாடுகள் தற்போது நல்ல நிலையில் உள்ளன. பொருளாதாரத்தை மையப்படுத்திய ஐரோப்பிய தன்னம்பிக்கை சில காலத்திற்கு பாதுகாப்பு செலவினங்களை அதிகரித்துமிருந்தன. அமெரிக்காவில் குடியரசுக் கட்சியும் ஜனநாயகக் கட்சியும் முரண்பாடுகளுக்கு அப்பால் தங்களை நிர்வாகங்களின் திறமையான பங்காளிகளாக நிஷரூபிக்கின்றன. அதேநேரம் பிரான்ஸும் ஜேர்மனியும் அரசியல் முரண்பாட்டுக்குள் சிக்கியுள்ளன.

ஆனால், அமெரிக்கத் தேர்தலுக்கு அடுத்த நாளே ஜேர்மனியின் பலவீனமான கூட்டணி அரசாங்கத்தின் சரிவு ஐரோப்பாவைப் பொறுத்தவரை ட்ரம்பின் மீள் வருகை பற்றிய விழிப்புணர்வை ஊட்டியுள்ளது. ஆனாலும் எச்சரிக்கையுடனும் நோக்கப்படுகிறது.

ஜோ பைடனின் சில பலவீனங்களும் நிர்வாகச் சிக்கல்களும் ட்ரம்பின் மீள் வருகையில் மாற்றுத் தன்மையுடைய இயல்பு ஒன்றுக்குக் காரணம் என்று கூறினாலும் ட்ரம்ப் ஒரு ஒழுக்கத்திற்கு உட்பட்டவரல்ல என்ற கருத்தும் உண்டு. ஆனால், அமெரிக்க அரசியலின் ஆழமான அம்சத்தின் பிரதிநிதியாகவும் ட்ரம்ப் நோக்கப்படுகிறார்.

ட்ரம்பின் முன்னைய ஆட்சியில் பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோனின் நேட்டோ குறித்த செயற்பாடுகளை விமர்சிக்கும்போது, நோட்டோவின் மூளை இறந்துவிட்டதாகக் குற்றம் சுமத்தியிருந்தார். ஆனால், ட்ரம்பின் மீள் வருகை நோட்டோ பற்றிய மறுசீரமைப் பையும் சுட்டிக்காட்டுகின்றது என்ற கருத்தும் உண்டு.

அத்துடன் உக்ரெய்ன் எதிர்காலம் சந்தேகத்திற்கு இடமின்றி பைடன் நிர்வாகத்தின் கீழ் இருந்ததை விட மிகவும் ஆபத்தானதாக இருந்தாலும், ட்ரம்பின் மீள் வருகையை உக்ரெய்ன் வரவேற்கலாம் என "தி எகனாமிஸ்ட்" நாளிதழில் வெளியான கட்டுரை வாதிட்டுள்ளது. மேலும், சில உள்நாட்டு அமைச்சரவை பதவிகள் சர்ச்சையைத் தூண்டியிருந்தாலும், உக்ரெய்ன் - ரசியா மோதலுக்கு சிறப்புத் தூதராக கீத் கெல்லாக்கை ட்ரம்ப் தேர்ந்தெடுத்தமை வரவேற்கப்படுகின்றது. மார்கோ ரூபியோ தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டதிலும் முன்னேற்றங்கள் உண்டு.

ஜோ பைடனின் நிர்வாகம் சொல்லாட்சி ரீதியாக நம்பிக்கையுடன் இருந்தது. ஆனால் உக்ரெய்னில் மூலோபாய ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் எச்சரிக்கையாக இருந்தது. ஆனால், ட்ரம்பின் கீழ் உக்ரெயன் ரசியாவிடம் சரணடையாமல் மீண்டும் ஒருங்கிணைக்க ஒரு வாய்ப்பு உள்ளது. உக்ரெய்னை நேட்டோ கூட்டணிக்கு கொண்டு வருவதற்கு அளவிட முடியாத பலம் கொண்ட பெருமைமிக்க ஐரோப்பிய தேசமாக அதன் மதிப்புகள் மற்றும் அடையாளத்திற்கு உண்மையாக இருக்கக் கூடிய செயல் முறை வியூகங்களும் வகுக்கப்படுகின்றன.

ஆனால், பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் டொனால்ட் ட்ரமப்புக்கு சவால் மிக்கவராக மாறகக்கூடிய ஏது நிலை பற்றி சர்வதேச ஊடகங்கள் விமர்சிக்கின்றன. ஏனெனில், ட்ரம்பின் 2016- 2020 கால முதலாவது ஆட்சியில் நேட்டோவுக்குள் ட்ரம்பின் பல யோசனைகளுக்கு ட்ரம் நேரடியாக எதிர்ப்பு வெளியிட்டிருந்தார்.

மக்ரோன் 2017 ஆம் ஆண்டு முதன்முதலில் தேர்ந்தெடுக் கப்பட்டதிலிருந்து ஐரோப்பிய மூலோபாய சுயாட்சியில் ஒரு நிகழ்ச்சி நிரலாக இருந்து வருகிறார். அந்த நிகழ்ச்சி நிரல் பல்வேறு ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளுக்கு வெவ்வேறு வியூங்களைக் குறிக்கும் ஒரு சிக்கலான யோசனையாகவும் அமைந்திருந்தன.

மக்ரோனைப் பொறுத்தவரை, உலக அரங்கில் ஒரு புவிசார் அரசியல் பங்காளராக இல்லாமலும் அமெரிக்காவைச் சாராமல் ஐரோப்பா சுதந்திரமாகச் செயல்படுவதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்ற பிரதான இலக்குடன் இயங்கி வருகிறார். ஆனால், ட்ரம்பின் மீள் வருகையின் பின்னர் மக்ரோன் இன்னும் எத்தனை காலத்திற்கு பிரான்ஸ் ஜனாதிபதியாக இருக்கப் போகிறார் என்பதும் கேள்விகுறிதான்.

2028 இல் ட்ரம்பின் இரண்டாவது பதவிக்காலம் முடிவடையும் போது ஐரோப்பா எப்படி இருக்கும் என்று கணிப்பது மிகவும் கடினம். மக்ரோன் போன்ற தலைவர்கள் சர்வதேச அரசியல் - பொருளாதார மேடையை விட்டு வெளியேறியிருப்பார்கள். உக்ரெயன் இன்னும் அதன் உயிர் வாழ்விற்காக போராடிக்கொண்டிருக்கலாம். அல்லது நடுநிலைமைக்கு கட்டுப்பட்டிருக்கலாம். மேலும், எதிர்பாராத மோதல்களும் வெளிப்படும். ஆகவே, ஐரோப்பிய ஒற்றுமைத் தொனி அமெரிக்கச் சார்புடன் சேரகக்கூடிய வாய்ப்பையும் தோற்றுவிக்கலாம்.

தப்போதைக்கு, அமெரிக்க - ஐரோப்பிய உறவு மற்றும் அதன் சொந்த அணிகளுக்குள் இருந்து கணிக்க முடியாத அளவிற்கு மாற்றுத் தன்மைக்கு அதாவது, ட்ரம்புடன் சேர்ந்து பயணிக்க வேண்டும் என்ற தவிர்க்க முடியாத சூழ்நிலைக்குத் தயாராகக்கூடிய வாய்ப்புகள் விஞ்சியுள்ளன.

பூகோள அரசியல் ரீதியாக சுதந்திரமான செயற்பாட்டாளர்களாக இயங்கும் ஐரோப்பாவின் திறனை மட்டுமல்ல, அமெரிக்க - ஐரோப்பிய உறவுக்கு எதிரான வியூகங்களை வகுக்கும் ரசிய - சீனா போன்ற ஏனைய பலம்பொருந்திய சர்வதேச நாடுகளின் வியூகங்களைத் தகர்க்கக்கூடிய வல்லமை ட்ரம்பிடம் உண்டு என்ற அவதானிப்புடன் செயற்பட வேண்டிய முன் எச்சரிக்கையும் உண்டு.

# புனரமைப்பு செய்யப்பட்ட கிண்ணியா மீன் சந்தையின் அவல நிலை



கிண்ணியா நகர சபைக்குச் சொந்தமான பிரதான மீன் சந்தை போதிய பராமரிப்பு வசதிகள் இன்றி, சுமார் ஒரு வருடத்துக்கு மேலாக மிக மோசமாக சேதமடைந்து காணப்படுவதாக நுகர்வோர்களும் வியாபாரிகளும் விசனம் தெரிவிக்கின்றனர்.

மீன் சந்தையில் போதிய சுத்திகரிப்பு மற்றும் கழிவகற்றல் பணிகள் இடம் பெறாமையால், இங்கு ஒவ்வொரு நாளும் துர்நாற்றம் வீசுவதாக இவர்கள் கூறுகின்றனர்.

இதன் காரணமாக மீன் வாங்க செல்லும் பொதுமக்கள் சந்தைக்குள் நுழைந்தவுடன், சந்தையை விட்டும் திரும்பி செல்கின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது.

மேலும், இந்த மீன் சந்தையை சுற்றிவர அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வேலிகள் முழுமையாக சேதமடைந்துள்ளதனால், இரவு நேரங்களில் நாய்களின் கூடாரமாக இந்த மீன் சந்தை மாறி இருக்கின்றது. இதனால் நாய்களின் கழிவுகளும் சேர்வதால் சந்தை மோசமாக பாதிக்கப்படுகின்றது.

இது குறித்து, சந்தைக்கு மீன் வாங்க வந்த 56 வயதான வஜுர்தீன் நவாஹிர் கூறுகையில்,

"நாய்களின் கழிவு நாற்றத்தால் உள்ளே மீன் வாங்க வர முடியாது. இங்கே வந்து பாருங்க எத்தனை நாய் படுக்குது என்று. நகர சபையிடம் கெஞ்சி கேட்கிறேன். அல்லாஹ்வுக்காக இதை நன்றாக, சுத்தமாக செய்துகொடுங்க. நான் மக்களுக்காகவே பேசுகிறேன். தொடர்ந்து மாத கணக்கில், வருட கணக்கில் என்று இந்த நாற்றத்தைதான் அனுபவித்துக் கொண்டு வருகிறோம். இதற்கு முடிவே இல்லையா? மக்கள் விருப்பத்தோடு, இங்கு மீன் வாங்க வர வேண்டும். அதற்கு ஏற்ற மாதிரி இந்த சந்தையை அமைத்து தர வேண்டிய பொறுப்பு நகரசபைக்குத்தானே இருக்கின்றது" என்று அவர் தனது வேதனையை பகிர்ந்து கொண்டார்.

மலசல கூடம் பாவிக்க முடியாத அளவுக்கு சேதமடைந்து காணப்படுவதால் வியாபாரிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஒரு மீன் வியாபாரியிடம் நாளொன் றுக்கு 200 ரூபா நகர சபையால் அறவிடப்படுகின்றது. ஆனால், வியாபாரத்தை திருப்திகரமானதாக செய்வதற்கு, எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுவதில்லை என வியாபாரிகள் கூறுகின்றனர்.

"இந்த மார்க்கெட்டை நாளாந்தம் சுத்தம் செய்வதற்கு ஊழியர் ஒருவரும் இல்லை. நாங்கதான் வந்து சுத்தம் செய்து கொள்கிறோம். இரவில் நாய்கள் வந்து தூங்குகின்ற இடம்தான் இது. பகலில் நாங்கள் வந்து சுத்தம் செய்கிறோம். மக்கள் இங்கு விரும்பி வருகின்ற அளவுக்கு மீன் மார்க்கெட் சுத்தமில்லை. மீன் வாங்க வருகின்றவர்களும் மூக்கை பொத்திக்கொண்டு தான் வருகிறார்கள். ஒரு லட்சம் மக்கள் வாழுகின்ற இந்த கிண்ணியாவிலே மார்க்கெட் இப்படியா இருப்பது? நீங்க நேரடியா பாருங்க



"என்று இங்கு மீன் வியாபாரம் செய்யும் கே. குணசேகரன் தெரிவித்தார்.

"இங்கே ஐந்து வியாபாரிகளுக்கு மாத்திரம்தான் வியாபாரம் செய்யக்கூடிய வசதி இருக்கிறது. ஆனால் 20 க்கு மேற்பட்ட வியாபாரிகள் நாளாந்தம் இங்கு வருகின்றனர். எல்லோருக்கும் சந்தைக்குள் இருந்து வியாபாரம் செய்ய இடம்போதாது. இதனால், வீதி ஓரங்களில் நின்று வியாபாரம் செய்து வருகின்றோம். இந்த சந்தையை விசாலமானதாக்கி தந்தால், நாங்கள் வீதியில் நின்று வியாபாரம் செய்ய வேண்டிய தேவை இல்லைதானே. அப்போது, பொதுமக்களுக்கும் எந்த தடையும் இல்லையே " என்று இங்கு மீன் வியாபாரம் செய்யும் அப்துல் குத்தூஸ் என்ற வியாபாரி தெரிவித்தார்.

இது தொடர்பில் பலமுறை நகர சபைக்கு தெரியப்படுத்தியும் அவர்கள் கண்டுகொள்ளாது இருப்பதாக வியாபாரிகளும் பிரதேச மக்களும் குற்றம் சுமத்துகின்றனர்.

மேலும், இங்கு மீன் வியாபாரம் செய்யும் கயாத்து முகம்மது நஸீர் என்பவர் கருத்து கூறும் போது, "இங்கு மீன் வாங்க வருபவர்கள் வெறுப்புடனே வருகிறார்கள். எங்களுக்கே கஸ்டமாக இருக்கிறது. என்ன செய்வது? எங்களுடைய தொழில் இது. இந்த சந்தை ஊரையே அசிக்கப்படுத்துகிறது. இதனை தேடுவார் எவரும் இல்லையா? இதற்கு நிரந்தரமான கட்டடம் எப்போது வரும் என காத்துக் கொண்டிருக்கிறோம் என தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார் இந்த மீன் வியாபாரி.

மேற்படி விடயங்கள் தொடர்பாக மக்களுடைய முறைப்பாடுகள் குறித்து, கிண்ணியா பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியிடம் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ், தகவல்கள் கோரப்பட்டன.

2024.08.14 ஆம் திகதி பதில்கள் எமக்கு அனுப்பப்பட்டிருந்தன. இந்த அறிக்கையில், கிண்ணியா பிரதேசத்துக்கு பொறுப்பான சுகாதார வைத்திய அதிகாரி எம். எச்.எம். ரிஸ்வி மற்றும் இந்த சந்தை அமைந்துள்ள சின்னக் கிண்ணியா பகுதிக்கு பொறுப்பான பொது சுகாதார பரிசோதகர் எஸ். எம். நௌசாத் ஆகியோர் ஒப்பமிட்டுள்ளனர்.

(RTI தகவல் இணைக்கப்பட்டுள்ளது)

அதில் பின்வருமாறு தெரிவிக் கப்பட்டிருந்தது.

"2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், தங்களினால், கோரப்பட்ட, கோரிக்கைக்கு அமைவாக, தெரிவிப்பவதாவது, பிரதான வீதி, சின்னக் கிண்ணியாவில் அமைந்துள்ள மீன் சந்தையானது கீழ், வரும் காரணங்களினால், பொருத்தமற்றதாக காணப்படுகின்றது.

1. போக்குவரத்துக்கு இடைஞ்சலாக உள்ளது.
2. மீன் சந்தை சுற்றிவர அடைக்கப்படாமையினால், கட்டாக்காலி நாய்கள், காகங்கள் உள்ளே செல்கின்றன.
3. நாளாந்தம் சுத்தம் செய்யப்படாமையினால், துர்நாற்றம் வீசுகின்றது.

மீன் வியாபாரிகளின் கோரிக்கைகளில், நியாயம் இருப்பதோடு, அவர்களின் கோரிக்கைகளும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதையும் சுகாதார பரிசோதகரின் அறிக்கை மேலும் தெளிவுபடுத்துகின்றது.

இந்த சந்தை, 2021 ஆம் ஆண்டுதான் 972,293.47 ரூபா செலவில் புனர் நிர்மாணம் செய்யப்பட்டிருக்கின்றது. இது அழிவடைந்து ஒரு வருடங்களுக்கு மேலாகின்றது. அப்படியானால், இரு வருடங்களுக்குள் அடிவடைந்தமைக்கான காரணம் என்ன? என பொதுமக்கள் வினவுகின்றனர்.

இது தொடர்பாக கிண்ணியா நகரசபை செயலாளரிடமிருந்தும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ், தகவல்கள் கோரப்பட்டன.


இதற்கான பதில்கள், 2024.08.05 திகதி நகர சபை செயலாளர் எம். கே. அனீஸினால் ஒப்பமிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட பதிலில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டு இருந்தது. (RTI தகவல் இணைக்கப்பட்டுள்ளது).

1. கிண்ணியா ஒரிகன் பாலத்துக்கு அருகில் இருக்கும் மீன் சந்தை 10.08.2021 ஆண்டு ஒப்பந்தம் செய்யப்பட்டு, 15.09. 2021 ஆண்டு நிறைவு பெற்றது.
2. இதற்காக செலவு செய்யப்பட்ட தொகை ரூபா 972,293.47 ஆகும். இந்த நிதி உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ், (LDSP) செலவு செய்யப்பட்டது.
3. வழமையாக நான்கு வியாபாரிகள் வியாபாரம் செய்து வருவதுடன் மாதத்தின் சில நாட்களில் மாத்திரம் மேலதிகமாக ஒருவர் அல்லது இருவர் வியாபாரம் மேற்கொள்கின்றனர்.
4. வியாபாரம் மேற்கொள்ளும் நாட்களுக்கு மாத்திரம் நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்களுக்காக தலா ரூபா 200 அறவிடப்படுகின்றது.
5. இச்சந்தையை சுத்தம் செய்வதற்கு பருவகால அடிப்படையில் எம். எஸ். எம். மதார் என்பவர் பணிக்கமர்த்தப்பட்டுள்ளார்.
6. எமது நகர சபையில் நாளாந்த அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும் ஊழியர் ஒருவரை கொண்டு துப்புரவு பணியினை மேற்கொள்வதனால் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை துப்புரவு பணிகள் இடம்பெற்று வருகின்றது என்பதை அறிய தருகிறேன்.

அத்துடன் எதிர்காலத்தில் எமது சபைக்கு வழங்கப்படும் வேலை திட்டங்களுக்கான நிதி உதவித் தொகையிலிருந்து இந்த சந்தையை புனர்நிர்மாணம் செய்வதற்கு மீன் வியாபாரிகள் சங்கத்துடன் கலந்துரையாடப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■



கிண்ணியா
கியாஸ் ஷாபி



# தப்பியோடிய சிரிய ஜனாதிபதி: மாயமான விமானம்..?





தாமோதரம் சுதாகரன்

சிரியா அல்லது சிரிய அரபுக் குடியரசு மத்தியகிழக்கில் அமைந்துள்ள ஒரு நாடாகும். இது மேற்கில் லெபனானையும், தென்மேற்கில் இஸ்ரேலையும், ஜோர்தானையும், கிழக்கில் ஈராக்கையும், வடக்கே துருக்கியையும் எல்லையாகக் கொண்டுள்ளது.

இந்நிலையில், சிரிய அரசுக்கு எதிராக போராளிக்குழுக்களால் அவ்வப்போது நடைபெற்றுவந்த போர் கடந்த வெள்ளியன்று முடிவுக்கு வந்ததாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அதாவது சிரிய ஜனாதிபதி பக்ஷர் அல் ஆசாத்தின் ஆட்சி கவிழ்க்கப்பட்டுள்ளதாகவும் எச்டிஎஸ் போராளி குழுக்கள் தலைநகர் டமஸ்கஸை கைப்பற்றி தலைநரை தமது முழுமையான கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளதாகவும் அந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹயாத் தஹ்ரீர் அல்க்ஷாம் (HTS) என்ற போராளிக் குழுவினரே தற்போது சிரிய அரசுக்கு எதிராக போராடி வந்த நிலையில் நாட்டின் முக்கியமான நகரங்களை வரிசையாகக் கைப்பற்றிவருவது குறிப்பிடத்தக்கது. இதனால் சிரிய ஜனாதிபதி பக்ஷர் அல் ஆசாத் இப்போது நாட்டை விட்டு வெளியேறி இரகசிய இடத்திற்கு சென்று தஞ்சம் அடைந்துவிட்டார் என்ற செய்தியும் பரவித்தொடங்கியுள்ளது.

### போரின் பின்னணி

சிரியாவுக்கு இவ்வாறானதொரு நிலைமை ஏற்படுவதற்கு அங்கு நடைபெற்ற குடும்ப ஆட்சியே முக்கிய காரணம் என கூறப்படுகின்றது. கடந்த 2012 ஆம் ஆண்டுதான் இந்த போர் உக்கிரமடைய ஆரம்பித்ததுடன் தற்போது குறித்த சண்டை உச்சநிலையினை அடைந்துள்ளது. சிரிய ஜனாதிபதி பக்ஷர் அல் ஆசாத்தின் ஆட்சிக்கு எதிராக பல்வேறு கிளர்ச்சிப் படைகள் அவ்வப்போது போராடி வந்த நிலையில் தற்போது எச்டிஎஸ் எனும் போராளிக்குழு தலைநரை கைப்பற்றி ஆட்சியமைக்கும் அளவுக்கு வலுப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை பிரிட்டிஷ் அராசாங்கத்தின் காலனித்துவத்தில் இருந்ததைப் போன்று ஒரு காலத்தில் சிரியா பிரான்ஸ் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. ஆனால் இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் அதாவது 1936 இல் அந்த நாடு பிரான்ஸ் அரசாங்கத்தால் குடியரசாக அறிவிக்கப்பட்டதுடன் பின்னர் 1946 இல் இரண்டாம் உலகப் போர் காரணமாக சுதந்திரம் பெற்று 1950 ஆம் ஆண்டுவரை நிலையில்லாத ஆட்சிகள் அங்கு நடைபெற்று வந்துள்ளன.

### 50 வருட குடும்ப ஆட்சி

அதன்பின் 1960 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலேயே அங்கு ஒற்றை ஆட்சி முறை வழக்கத்திற்கு வந்ததுடன் ஹபீஸ் அல் அசாத் என்பவர் முதல் ஜனாதிபதியாக அறிவிக்கப்பட்டார். அத்துடன் ஏனைய கட்சிகள் அனைத்தும் கலைக்கப்பட்டதுடன் இராணுவ ஆட்சிக்கு ஒப்பான ஆட்சியாக அவரது ஆட்சிக்காலம் இருந்து. அதேவேளை, அவரது ஆட்சிக்கு எதிராக கலக குரல்கள் எழுப்பப்பட்டு வந்தன.

ஆனாலும் ஹபீஸ் அல் அசாத்தின் ஆட்சி இராணுவ ஆட்சியை போலல்லாது அவ்வப்போது அவரால் கடைப்பிடிக்கப்பட்ட கொள்கைகளால் மக்கள் அவரை கொண்டாட ஆரம்பித்தாகவும் அவர்ஷி யா முஸ்லீம் பிரிவை சேர்ந்தவராகவும் அறியப்பட்டார். ஆனால் சியாவில் 90 சதவிகித மக்கள் சன்னி இனத்தவர்களாகும். இதனால் அரசின் முக்கிய முடிவெடுக்கும் பொறுப்புகளில் ஷியா இனத்தை சேர்ந்த முஸ்லிம்களே இருந்தார்கள்.

இதன் காரணமாக ஒரு கட்டத்தில் குறித்த ஆட்சியின் மீது மக்கள் வெறுப்படைய, பின்னர் அரசாங்கத்தின் முக்கிய பொறுப்புகளுக்கு சன்னி இனத்தவர்களும் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், 1998 ஆம் ஆண்டு ஹபீஸ் அல் அசாத் உடல் நிலை சரியில்லாமல் போகவே அவரது தம்பி ரிபாத்தை ஆட்சியில் அமர வைக்க முயற்சி செய்தார். ஆனால் ரிபாத் 1983இல் அரசுக்கு எதிராக செயல்பட்டது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து அவர் நாடு கடத்தப்பட்டார். இதன் பின்னர் ஹபீஸின் முதல் மகன் பஸால் ஆட்சியில் அமர ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஆனால், விதியின் குரூரம் அவர் பதவி ஏற்க இருக்கும் சில நாட்களுக்கு முன் பஸால் கார் விபத்தில் மரணமடையவே அவர்களது குடும்பத்தில் மீதம் இருந்தது பஷர் அல் ஆசாத் மட்டுமே. ஹபீஸ் அல் அசாத்துக்கு அரசியல் குறித்த அனுபவம் இல்லையாயினும் அவர் நன்றாக படித்த, துடிப்புள்ள இளைஞராகவும் இருந்தார்.

இந்நிலையில் ஹபீஸ் 2000 ஆம் ஆண்டில் மரணமடையவே, பஷர் அல் ஆசாத் ஜனாதிபதியாக பதவி ஏற்றார். படித்த இளம் நபர் ஆட்சிக்கு வருகிறார் என்று பலரும் எதிர்பார்த்துக் கொண்டு இருந்த வேளையில் எதிர்காலம் அவர்களுக்கு வேறு விதமான திட்டங்களோடு காத்திருந்தது. அவர் ஆட்சிக்கு வந்தவுடன் சன்னி, ஷியா பிரச்சனையை உருவாக்கினார். சிரியாவில் சிறுபான்மையினரான சன்னி மக்கள் முற்றிலும் அகற்றப்பட்டார்கள். அரசின் அனைத்து பிரிவிலும் ஷியா மக்கள் அமர்த்தப்பட்டனர். இது பெரும் எதிர்பார்புகளோடு காத்திருந்த மக்களுக்கு பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

தந்தைக்குப் பின் 30 வருடங்கள் சிரிய ஜனாதிபதியாக இருந்து ஆசை தீர ஆண்டு மரணம் அடைந்தார். இந்நிலையில் அவருக்கு பின்னர் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற மகன் கடந்த 26 வருடங்களாக ஆட்சி செய்து வருகிறார். இவர்களது குடும்ப ஆட்சியில் கடந்த 56 வருடங்களில் யாருக்கும் வேலை இல்லை. சரியான மருத்துவம் இல்லை. உணவு இல்லை என்ற விமர்சனங்களுடன் சிரியா மூன்றாம் தர நாடாக மாறி இருந்தது.

இவ்வாறான ஒரு ஆட்சியை எதிர்த்து தான் சிரியாவில் போர் ஆரம்பமானது. ஆனாலும் உலக நாடுகள் பல சிரிய ஜனாதிபதிக்கு உதவியளிக்க முன்வந்தனர். இந்நிலையில் துபாய் போன்ற நாடுகள் போராளி குழுக்களுக்கு ஆதவளித்தன. ஆனாலும் இந்த போர் முடியும் என்பதற்கான எந்த அறிகுறியும் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை தெரியவில்லை.

இந்த போரில் இதுவரை 5,11,271 பேர் கொல்லப்பட்டும் பல இலட்சம்பேர் படுகாயமடைந்தும் உள்ளனர். ஆனால் இன்னும் பலரின் மரணம் குறித்த முறையான அறிவிப்பு வெளியாகாததால் இந்த எண்ணிக்கை 6 இலட்சத்தை தாண்டும் என்று ஐநா அமைப்பு கூறியுள்ளது. பஷர் அல் ஆசாத் பிறந்த ஊரில் தான் இப்போது போர் உச்சம் அடைந்து இருக்கிறது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே சிரிய ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்தின் ஆட்சி கவிழ்ந்ததாக தகவல் வெளியாகி உள்ளன. அங்கே போராளி குழுக்கள் தலைநகர் டமாஸ்கஸை கைப்பற்றி உள்ளதாகவும் விரைவில் நாடாளுமன்றத்தை கைப்பற்றப் போவதாகவும் குறித்த போராளிக்குழு அறிவித்துள்ள நிலையில் அங்கே ஆட்சி கவிழ ஹயாத் தஹ்ரீர் அல் க்ஷாம் (HTS) என்ற போராளி குழுவே முக்கிய காரண மாகும்.

அல் கொய்தாவில் இளம் போராளியாக அனுபவம் பெற்ற இராணுவத் தளபதியான அபு முகமது அல்-ஜோலானி என்பவரால் HTS உருவாக்கப்பட்டது. அபு முகமது அல்-ஜோலானி மிகவும் இளம் தலைவர் என்றாலும் அவருக்கு இராணுவ ரீதியாக நிறைய அறிவு உள்ளது. அதேபோல் அரசியல் ரீதியாகவும் அவருக்கு நிறைய அறிவு இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

போராளி குழுக்களிடம் சரணடையுமாறு அந்நாட்டு இராணுவத்தினருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது. 50 வருட ஆட்சி கவிழ்ந்துவிட்டதாக, வீரர்களுக்கு அந்நாட்டு இராணுவம் அறிவிப்பு வெளியிட்டு உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. சிரியாவில் இருந்து அந்நாட்டு ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் விமானத்தில் இரகசியமாக தப்பி ஓடிவிட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

## 50 வருட சர்வாதிகார ஆட்சியை முடித்த இளம் புயல்: யார் இந்த ஜோலானி?







### யார் இந்த அபு முகமது அல்-ஜோலானி

1982 ஆம் ஆண்டு சவூதி அரேபியாவின் ரியாத்தில் பிறந்த அபு முகமது அல்-ஜோலானி சாதாரண குடும்ப பின்புலத்தை கொண்டவர். அவரது தந்தை பெட்ரோலியம் பொறியாளராக பணியாற்றினார். இவர்கள் 1989 இல் சிரியாவுக்குத் சென்று டமஸ்கஸ் அருகே குடியேறினர்.

2003 இல் அவர் ஈராக்கிற்குச் செல்வதற்கு முன்பு டமஸ்கஸில் என்ன செய்து கொண்டு இருந்தார் என்பது பற்றி அதிகம் அறியப்படவில்லை. அப்போதுதான் ஈராக் உள்ளிட்ட நாடுகள் மீது அமெரிக்கா ஆக்கிரமிப்புகளை மேற்கொண்டு வந்தது. அமெரிக்காவை எதிர்க்கும் விதமாக ஈராக்கில் அல்-கொய்தாவில் அபு முகமது அல்-ஜோலானி முதன் முதலில் இணைந்ததுடன் அங்கே பின்லேடனுக்கு அருக்கு மிகவும் நெருக்கமானவராக அறியப்பட்டார்.

2006 இல் ஈராக்கில் அமெரிக்கப் படைகளால் கைது செய்யப்பட்டு, ஐந்து வருடங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த அல்-ஜோலானி, பின்னர் சிரியாவில் அல்-கொய்தாவின் கிளையை நிறுவும் பணியில் ஈடுபட்டார், அல்-ஜோலானி அந்த ஆரம்ப ஆண்டுகளில் அல்-கொய்தாவின் இஸ்லாமிக் ஸ்டேட் ஈராக்கின் தலைவரான அபு பக்கர் அல்-பாக்தாதியுடன் பணியாற்றி வந்த நிலையிலே குறித்த அமைப்பு பின்னர் ISIL (ISIS) ஆக பெயர்மாற்றம் பெற்றது.

ஏப்ரல் 2013 இல், அல்-பாக்தாதி அல்-கொய்தாவுடனான உறவுகளை நிறுத்தியதோடு மாத்திரமல்லாது, சிரியாவில் தனியாக வளரப்போகிறோம் என்று அறிவித்தார். ஆனால் அபு முகமது அல்-ஜோலானி தொடர்ந்து அல்-கொய்தாவுடன் நட்பாக இருக்க விரும்பிய நிலையில். 2016 இல் ஐஎஸ்ஐஎஸ் அமைப்புடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக ஜோலானி 2017 HTS அமைப்பை உருவாக்கினார். இந்த அமைப்பை உருவாக்கி வெறும் 7 வருடங்களிலேயே சிரியாவில் போரை முடிவுக்கு கொண்டுவந்துள்ளார்.

அல்-ஜோலானியுடன் தற்போது 10 இற்கும் மேற்பட்ட போராளி குழுக்கள் கைகோர்த்து உள்ளன. இவ்வாறானதொரு நிலையிலேயே சிரிய ஜனாதிபதி பக்ஷர் அல் ஆசாத்தின் ஆட்சி முடிவிற்கு வந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அவருக்கு எதிராக கிளர்ச்சியாளர் படை கிட்டத்தட்ட 50 வருடங்களாக போராடி வருகின்றது. அந்த போர் தற்போது முடிவிற்கு வந்ததாக கூறப்படுகிறது.

சிரிய ஜனாதிபதி ஆசாத் கட்டுப்பாட்டில் இருக்கும் இடங்களில் சிலவற்றை காப்பாற்றி அல்-ஜோலானி அங்கே புதிய இஸ்லாமியச் சட்டங்களை அறிமுகப்படுத்தியதுடன் புதிய கல்வி முறை மற்றும் மக்களுக்கு தேவையான மருத்துவம், வீடுகள் உள்ளிட்ட வசதிகளை வழங்கினார். அத்தோடு மட்டுமல்லாமல் கடுமையான தண்டனைகளையும் அறிவித்தார்.

2014 இல் தனது முதல் தொலைக்காட்சி நேர்காணலின் போது, அல் ஜசீராவிடம் கூறிய அல்-ஜோலானி நான் ஆட்சிக்கு வரும் இடங்களில் எல்லாம் “இஸ்லாமிய சட்டம்” கொண்டு வரப்படும். சிறுபான்மையினரான கிறிஸ்தவர்கள், இந்துக்கள் மற்றும் அலாவிகள் வெளியேற்றப்படுவார்கள் என அறிவித்தார்.

தற்போது சிரிய ஜனாதிபதி ஆசாத் தலைமறைவாகி உள்ள நிலையில் அபு முகமது அல்-ஜோலானி அங்கே நாட்டின் தலைவராகும் வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளதாக கூறப்படுகின்றது. இதன்மூலம் பஷர் அல் ஆசாத்தின் 50 வருட ஆட்சி கவிழ்க்கப்பட்டுள்ளதுடன் அவர் தனி விமானத்தில் வெளிநாட்டிற்கு தப்பி சென்றுள்ள அதேவேளை தலைநகர் சுற்றி வளைக்கப்பட்டதால் அவர் தலைநகரை விட்டு வெளியேறிவிட்டதாக கூறப்படுகிறது.

அத்தோடு அந்நாட்டு இராணுவத்தின் முக்கிய தலைவர்களும் நாட்டை விட்டு ஓடிவிட்டதாகவும் போராளி குழுக்களிடம் சரணடையுங்கள், இல்லையேல் நாட்டை விட்டு வெளியேறுங்கள் என்று தனது இராணுவ வீரர்களுக்கு அந்நாட்டு இராணுவம் உத்தரவிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

### வெற்றி:

சிரியாவில் அந்நாட்டு அரசுக்கு எதிராக பல அமைப்புகள், போராளிகள் போராடி வந்த நிலையில் ஹயாத் தஹ்ரிர் அல் ஷாம் (HTS) குழுக்கள்தான் தற்போது சிரியாவை கைப்பற்றத் தொடங்கியுள்ளது.

ஈராக், ஜோர்டான் மற்றும் லெபனான் எல்லையில் அமைந்துள்ள சிரியாவின் மிகப்பெரிய மாகாணமான ஹோம்ஸ ின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றியதாக ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் ((HTS) என்ற போராளிக் குழு கடந்த சனிக்கிழமையன்று(07) முதலில் அறிவித்தது. கடந்த வருடம் நவம்பர் மாதம் 27ஆம் திகதியன்றே இவர்கள் சிரிய அரசாங்கத்துக்கு எதிரான தமது முற்றுகை போரை அறிவித்த நிலையில் தற்போது சிரியாவின் முக்கிய நகரங்களை கைப்பற்றி மிகப்பெரிய வெற்றியை பதிவு செய்துள்ளனர்.

குறித்த முற்றுகை காரணமாக தற்போதுவரை அந்நாட்டு தலைவர், இராணுவம், தலைநகரில் உள்ள பிரதான செய்தி ஊடகங்கள், சிரிய அரசாங்கத்துக்கு சொந்தமான கட்டிடங்கள் போராளி குழுக்கள் கைவசம் உள்ளத்துடன் அடுத்த சில மணி நேரங்களில் நாடாளுமன்றம் உள்ளேயும் அவர்கள் செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.



# அரிசி, தேங்காய் தட்டுப்பாடு

## சிரமங்களுக்கு தீர்வு என்ன?

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக எதிர்வரும் சில மாதங்களுக்கு நாட்டில் மேலும் அரிசித் தட்டுப்பாடு ஏற்படலாம் என அஞ்சப்படுகின்றது. கடந்த இரண்டு வாரங்களாக தொடர்ச்சியாக பெய்த கடும் மழை காரணமாக நாட்டின் பல பாகங்களில் செய்கை பண்ணப்பட்டிருந்த 250,000 ஏக்கர் வயல் நிலங்கள் அழிந்து நாசமாகி உள்ளன. இந்த வயல் நிலங்கள் அனைத்தும் பயிரிடப்பட்டிருந்த நிலங்களாகும். அதனால், ஆயிரக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்பட்டு ஜீவனோபாயத்தை இழந்தவர்களாக உள்ளனர். இவர்களுக்கு நியாயமான நஷ்டஈடு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் நாட்டில் எப்போதும் இல்லாத அளவிற்கு தேங்காய்க்கான தட்டுப்பாடும் ஏற்பட்டிருக்கின்றது. அதனால், தேங்காய் விலை 200 ரூபாவுக்கும் மேல் சென்றிருக்கின்றது.

அரிசி, தேங்காய் என வரும் போது இவை இரண்டும் அத்தியாவசியப் பொருட்களாகவே கருதப்படுபவை. ஏழை மற்றும் வறிய குடும்பங்களின் பசியைப் போக்க அதிகமாக கைகொடுக்கும் உணவுப் பொருட்களாக இவை உள்ளன. இந்த விடயம் தற்போது அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்திருக்கின்ற விடயமாக மாறி இருக்கின்றது. அதனால், முதலில் அரசாங்கம் அரிசி தட்டுப்பாட்டுக்கு தற்காலிக தீர்வாக 2024 டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி வரையில் அரிசி இறக்குமதியில் விதிக்கப்பட்டுள்ள சகலவிதமான கட்டுப்பாடுகளையும் தளர்த்தி அரிசி இறக்குமதிக்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றது. அதற்கமைவாக இம்மாதம் 21 ஆம் தகதிக்குள் 50,000 முதல் 70,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்யவும் அரசாங்கம் திட்டமிட்டிருக்கின்றது. அதற்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப் பட்டிருப்பதாக வர்த்தக வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அமைச்சர் வசந்த சமரசிங்க 2024.12.04 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தார்.

பொதுவாக நாட்டில் பாரிய அளவில் அரிசிக்கான தட்டுப்பாடு நிலவி வருவதால் அரிசியின் விலை நாளுக்கு நாள் உயர்வடைகின்றது. பொதுவாக பார்க்கின்ற போது குறிப்பிட்ட பொருளின் விலையை அதிகரிக்கச் செய்ய வேண்டுமானால் அந்த பொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட வேண்டும். ஆனாலும், இலங்கையில் போதுமான அளவில் விவசாயம் நடைபெறுகின்ற நிலையில், நெல் உற்பத்தி காரணமாக அரிசி உற்பத்தி தேவையான அளவில் உள்ளது என்றே கணிக்கப்படுகின்றது. இருப்பினும், இரண்டு போகங்களுக்கு

**நாளொன்றுக்கு 1200 முதல் 1500 மெ.தொ அரிசி கோழித் தீனிக்காக பயன்படுத்தப்படுவதாக தகவல்**

நெற்செய்கை பண்ணப்பட்டாலும் நாட்டில் அரிசிக்கு கணிசமான அளவில் தட்டுப்பாடு நிலவுவதாகவே தெரிவிக்கப்படுகின்றது. இந்த தட்டுப்பாட்டை நெல் ஆலை உரிமையாளர்கள் திட்டமிட்ட அடிப்படையில் ஏற்படுத்துவதாகவும் அதனால் இவர்களை அரிசி மாஃபியாக்கல் என குற்றச் சாட்டும் அளவிற்கு நிலைமை பாரதூரமாகியுள்ளது. ஆனால், பிரதான நெல் ஆலை உரிமையாளர்களோ இந்த குற்றச்சாட்டை மறுக்கின்றனர்.

எவ்வாறாயினும் இரண்டு போகங்களிலும் நாட்டில் மொத்தமாக ஒரு வருடத்தில் 30 இலட்சம் மெற்றிக் தொன் அரிசி உற்பத்தி செய்யப்படுவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இதில் பெரும் போகத்தில் 26 இலட்சம் மெற்றிக் தொன் நெல் அறுவடையும், சிறு போகத்தில் 22 இலட்சம் மெற்றிக் தொன் நெல் அறுவடையும் செய்யப்படுகின்றது. இந்த அளவு நெல் அரிசியாக வரும் போது 30 இலட்சம் மெற்றிக் தொன் அளவு அரிசி உற்பத்தியாகின்றது.

அவ்வாறு பார்க்கும் போது ஒரு வருடத்திற்கு தேவைப்படும் அரிசியின் அளவு சுமாராக 20 இலட்சம் மெற்றிக் தொன் அளவாகும். அவ்வாறாயின் அரிசி உற்பத்தி தேவைக்கு அதிகமானதாக மாறி மேலதிக உற்பத்தி நடைபெறுகின்றது என்பது புலனாகின்றது. ஆனாலும், அந்த மேலதிகமான 10 இலட்சம் மெற்றிக் தொன் அரிசிக்கு என்ன நடக்கின்றது என்ற கேள்வி எழுகின்றது. இந்த இடத்தில் தான் நெல் ஆலை உரிமையாளர்கள் மீதான சந்தேகம் வலுவடைந்து இவர்கள் அரிசியை பதுக்கி வைத்து விலையை அதிகரிக்கின்றனர் என சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனாலும், விவசாய அமைச்சின் தகவல்களின்படி மேலதிக அரிசியில் கணிசமான அளவு உப உணவு உற்பத்திக்காகவும் செலவிடப்படுவதால் அதுவும் இவ்வாறான தட்டுப்பாட்டிற்கு காரணமாக அமைவதாகவும் தெரிவித்துள்ளது. குறிப்பாக நாட்டில் 02 கோடி கோழிகள் வளர்க்கப்படுகின்றன. இந்த கோழிப் பண்ணையாளர்கள் நாளாந்தம் 90



இலட்சம் முட்டைகளை பெறுகின்றனர். அதில் ஒருநாளைக்கு 85 இலட்சம் முட்டைகள் பல்வேறு தேவைகளுக்காக நுகரப்படுகின்றன. இந்தளவு கோழிகளுக்கு கோழித் தீன் உற்பத்திக்காகவும் அசிரி பயன்படுத்தப்படுகின்றது. குறிப்பாக ஒரு நாளைக்கு 1200 முதல் 1500 மெற்றிக் தொன் அரிசி கோழித் தீனுக்காக பயன்படுத்தப்படுவதால் நாட்டில் அரிசி உற்பத்தி அபரிமிதமானதாக இல்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

தேவைக்கு மேலதிகம் என்ற நிலை இல்லாமல் சராசரியாகவே அரிசியின் இருப்பு இருந்து வருகின்றது. அதன் காரணமாகவே தட்டுப்பாடு ஏற்படுவதாக விவசாய அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. எவ்வாறாயினும் நாட்டில் அரிசிக்கான தட்டுப்பாடு உக்கிரமடையும் போது உள்நாட்டில் விலை அதிகரிப்பு

**நாட்டில் ஒரு வருடத்தில் 30 இலட்சம் மெ.தொ அரிசி உற்பத்தி செய்யப்படுவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிப்பு**

ஏற்படுகின்றது. அதனால் பாதிக்கப்படுபவர்கள் அப்பாவி பொது மக்களாவர்.

இந்நிலையில் தான் தேங்காய் விலை உயர்வாலும் மக்கள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

**பெருந்தோட்ட மக்களை பாதிக்கும் தேங்காய் விலை அதிகரிப்பு**

அதனால், கூடுதலாக பாதிக்கப்பட்டிருப்பவர்கள் பெருந்தோட்டத் தொழிலாளர்களாவர். அன்றாடம் தோட்ட வேலைக்கு செல்லும் குடும்பப் பெண்கள் பிரதான உணவாக ரொட்டியை தயாரிக்க தேங்காயை பயன்படுத்துவதால் இந்த 200 ரூபாய் வரையிலான தேங்காய் விலை உயர்வும் தட்டுப்பாடும் அவர்களின் அன்றாட வாழ்க்கையை மேலும் பாதிக்கச் செய்திருக்கின்றது. அதுபற்றி அமைச்சர் சமரசிங்க தெரிவிக்கையில் இரண்டு வாரங்களுக்குள் 10 இலட்சம் தேங்காய்களை குருணாகலையில் அமைந்துள்ள தேங்காய் ஆராய்ச்சி மையம் ஊடாக விநியோகிக்கவும் அவற்றை சதொச முகவர் விற்பனை நிலையங்கள் மூலம் 110 ரூபாய் விலையில் விற்பனை செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக கடந்த 04 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தார். எவ்வாறாயினும் வறிய குடும்பங்களின் அன்றாட வாழ்க்கையை பாதிக்கும் மற்றும் வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு காரணமான விடயங்கள் தொடர்பாக அரசாங்கம் அவசரமாக உரிய கவனம் செலுத்தி மாற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது பாரிய பொறுப்பாக இருக்கின்றது.

ஏற்கனவே நாடு பொருளாதார சுமையிலும் நெருக்கடியிலும் இருக்கின்ற நிலையில் மக்களது அன்றாட அல்லது மாதாந்த வருமானத்தில் எந்தவிதமான உயர்வும் ஏற்பட்டதாக இல்லை. இதனால் மெய் வருமானம் வீழ்ச்சியடைந்து சேமிப்பும் இல்லாமல் போய்விட்ட நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறான வாழ்க்கைச் செலவு உயர்வு இன்னும் பல உப தேவைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருக்கின்றது. நாடு முழுமையாக வெளிநாட்டு கடனில் பயணிக்கின்ற நிலையில் குறுகிய காலப்பகுதிக்குள் மக்களுக்கு எந்தவிதமான நிவாரணங்களை வழங்கவோ அல்லது வாழ்க்கைச் செலவு உயர்வை கட்டுப்படுத்துவதற்கான மானிய உதவிகளையோ எதிர்பார்க்க முடியாத நிலை உள்ளது.

இதேவேளை, அண்மையில் எரிபொருள் விலைகள் மேலும் கணிசமான அளவு குறைக்கப்படலாம் என்று எதிர்பார்த்த நிலையில் 02 ரூபாவால் மாத்திரமே எரிபொருள் விலை குறைக்கப்பட்ட அதேவேளை, மண்ணெண்ணெய் விலை 05 ரூபாவால் அதிகரிக்கப்பட்டது. அத்துடன், மின்சார கட்டண விலைகள் குறைக்கப்படலாம் என்று எதிர்பார்த்துள்ள மக்களுக்கும் கடுமையான ஏமாற்றமே காத்துள்ளது. அதாவது, இவ்வருடத்திற்குள் மின்சார கட்டண விலைகளில் எந்தவிதமான குறைப்பும் இடம்பெறாது என்ற தகவல்கள் வெளியாகி உள்ளன. அதனால், முன்னைய ஆட்சியில் நடந்ததாக கூறப்பட்ட ஊழல்களை தேர்தல்கால பிரச்சாரமாக சந்தைப்படுத்தல் செய்தது போன்று தற்போதைய அரசாங்கம் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை கட்டுப்படுத்தவும் மக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் சேவைகள் துறையில் நிவாரணங்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பை கொண்டுள்ளமை மறுக்க முடியாததே. அதே நேரம், அஸ்வெசும கொடுப்பனவை அதிகரிக்கவும் வறிய குடும்பங்களை சேர்ந்த பிள்ளைகளுக்கு பாடசாலை புத்தகம் மற்றும் கற்றல் உபகரணங்களை கொள்வனவு செய்ய 6000 ரூபாய் கொடுப்பனவொன்றை வழங்கவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறான நிவாரண உதவிகள் முறையாக வறிய குடும்பங்களை சென்றடைகின்றதா என்பதையும் உரிய முறையில் உறுதிப்படுத்த வேண்டியது சம்பந்தப்பட்ட அதிகாரிகளது கடமையாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. ■





எம்.எஸ். அமீர் ஹுசைன்

# இந்திய அரசாங்கம் வடக்கில் நிவாரணம்






(சண்முகம் தவசீலன்)

இந்திய அரசு மற்றும் இந்திய மக்களின் நிவாரண பொருட்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மன்னார், முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு இந்திய துணைத் தூதர் ஸ்ரீ சாய் முரளி தலைமையில் சனிக்கிழமை (07) வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் அண்மையில் இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரை சந்தித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்கள் தொடர்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்த உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மன்னார் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மன்னார் துள்ளு குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவில் உள்ள 8 கிராமங்களைச்சேர்ந்த பாதிக்கப்பட்ட 461 குடும்பங்களுக்கு துள்ளு குடியிருப்பு ரோமன் கத்தோலிக்க பாடசாலையில் வழங்கி வைக்கப்பட்டன.

அத்தோடு முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 426 பயனாளிகளில் துணுக்காயில் 138 பயனாளிகளுக்கும் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் 288 பயனாளிகளுக்கும் முதற்கட்டமாக சனிக்கிழமை (7) வழங்கப்பட்டுள்ளன.

## ரெலோ தலைமைக்குழு; விந்தன் கனகரத்தினம் இடைநிறுத்தம்

(கி.வசந்தன்)



தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைமைக்குழு உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் கட்சியில் இருந்து தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து விளக்கம் கோரி கடிதம் அனுப்புவதற்கு தலைமைக்குழு தீர்மானித்துள்ளது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமை குழு கூட்டம் வவுனியா இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் சனிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது கட்சியின் உள்வீட்டு தகவல்களை வெளிட்டதாக தெரிவித்து விந்தன் கனகரத்தினம் மீது உறுப்பினர்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இதனையடுத்து அவரை கட்சியில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தி அவரிடம் இருந்து விளக்கம் கோருவதாக தலைமைக்குழு தீர்மானித்துள்ளது.

இதன்போது அவர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு சில உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். குறித்த தீர்மானத்தையடுத்து விந்தன் கனகரத்தினம் கூட்டத்தின் இடைநடுவில் வெளியேறி சென்றார்.

இதேவேளை கட்சியின் தீர்மானத்தை மீறி கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு அளித்தமைக்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கத்திடம் விளக்கம் கோரி கடிதம் அனுப்பவுள்ளதாகவும் தலைமைக்குழு தீர்மானித்துள்ளதுடன், கடந்த பாராளுமன்றத் தேர்தலில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் வேட்பாளரை பெயரிடும் விடயம் தொடர்பாக சுரேன் குருசாமி, சபா குகதாஸ் ஆகியோரிடமும் விளக்கம் கோரி கடிதம் அனுப்பவுள்ளதாக தலைமைக்குழு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## அரசியல் பிரிவினைகள் தமிழ்த் தேசியத்திற்கு பாதகமானது

### ரெலோ பேச்சாளர் சுரேன் குருசாமி

(கி.வசந்தன்)



பிரிந்து நின்று பயணிப்பது தமிழ்த் தேசிய அரசியலுக்கு பாதகமான சூழலை ஏற்படுத்தும். அதனை கடந்த தேர்தல் உணர்த்தியுள்ளது என தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) ஊடகப் பேச்சாளர் சுரேன் குருசாமி தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமைக்குழு கூட்டத்தின் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்துரையாற்றிய அவர், கடந்த தேர்தலில் நாங்கள் பெற்றுக் கொண்ட பெறுபேறுகள் அதில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பாக பேசியிருக்கிறோம். குறிப்பாக எதிர்காலத்தில் நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமிழ்த் தேசியத்தை பாதுகாக்கும் முகமாக தமிழ் தரப்பில் இருக்கக்கூடிய அனைவரும் ஒருமித்து பயணிப்பது தொடர்பான விடயங்கள் கலந்தா லோசிக்கப்பட்டது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தென்னிலங்கையின் அலை பெரிதாக வீசப்பட்டு எமது இளைஞர்கள் அள்ளுண்டு போனதை நாங்கள் அவதானித்திருக்கிறோம்.

ஆகவே, பிரிந்து நின்று பிரிவினையுடன் பயணிப்பது எமது இனத்தினுடைய இருப்பிற்கும் எதிர்கால தமிழ்த் தேசிய அரசியலுக்கும் பாதகமான சூழலை ஏற்படுத்தும். இதனை சீர்செய்து கொண்டு தமிழ்த் தேசியப் பரப்பிலே பயணிக்கின்ற அனைவரையும் ஒருமித்துக் கொண்டு பயணிப்பது பற்றி கலந்துரையாடி இருக்கிறோம் என்றார்.

## சிவஸ்ரீ விஸ்வ நாராயண குருக்கள் மறைவுக்கு இந்துக்குருமார் அமைப்பு இரங்கல்



இறைவனடி சேர்ந்த சிவஸ்ரீ விஸ்வ நாராயண குருக்களுக்கு இந்துக் குருமார் அமைப்பு இரங்கல் செய்தியை வெளியிட்டுள்ளது.

அவரது மறைவு குறித்து இந்துகுருமார் அமைப்பு தலைவர் சிவாகம கலாநிதி சிவஸ்ரீ. கு.வை.க. வைத்தீஸ்வரக் குருக்கள் மற்றும் செயலாளர் சிவஸ்ரீ. ச.சாந்தரூபக் குருக்கள் ஆகியோர் அனுப்பிய இரங்கல் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

நாராயண வாத்தியார் என நாம் எல்லோரும் அன்புடன் அழைத்து, பணியும் சிவஸ்ரீ விஸ்வ நாராயண குருக்களின் தேகம் நீத்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைந்தோம். கனடா, அவுஸ்ரேலியா, தென்னாபிரிக்கா, மலேசியா, சிங்கப்பூர், உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் உள்ள சைவ ஆலயங்களில் நடைபெறும் பல்வேறு வகையான சிறப்பு கிரியைகளில் பங்கேற்புடன், ஆலோசனைகளையும் வழங்கியவர். பல குருமார்களை உருவாக்கிய பெருமைக்கு உரியவர். அவரது ஆத்மா சிவபதமடைய இந்துக்குருமார் அமைப்பின் சார்பில் இறை பிரார்த்தனை செய்கின்றோம். அத்துடன் உறவுகளுக்கு எமது ஆறுதலையும் பகிர்ந்து கொள்கின்றோம்.

## வவுனியா - சேமமடு வாள்வெட்டு கொலை ஐவர் கைது

(கி.வசந்தன்)

வவுனியா, சேமமடு பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவம் தொடர்பில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் நேற்று தெரிவித்துள்ளனர்.

வவுனியா, சேமமடு, இளமருதங்குளம் பகுதியில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் நாவற்குளம் பகுதியை சேர்ந்த செல்வநிரோயன் (வயது 46) என்ற குடும்பஸ்தர் மரணமடைந்திருந்தார். குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஓமந்தைப் பொலிஸார் வாள்வெட்டில் ஈடுபட்டவர்கள் பயணித்த வாகனச் சாரதியை அன்றைய தினமே கைது செய்திருந்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவுப் பொலிசாரும், ஓமந்தை குற்றத்தடுப்பு பிரிவு பொலிசாரும் விசாரணைகளை மேற்கொண்டு வந்ததுடன், சம்பவத்துடன் தொடர்புடைய 5 பேரை கைது செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர். வவுனியா, உக்குளாங்குளம், கூமாங்குளம், வேலங்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 5 இளைஞர்களே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர். மேலதிக விசாரணைகளின் பின் அவர்களை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

## வடக்கு பொறியியலாளர்களால் உலர்உணவு பொதிகள் வழங்கல்





(பு.கஜிந்தன்)

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 600 குடும்பங்களுக்கு வட மாகாண பொறியியலாளர்கள் தன்னார்வமாக ஒன்றிணைந்து அத்தியாவசியப்பொருட்கள் அடங்கிய உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 300 குடும்பங்களுக்கும் யாழில் 250 குடும்பங்களுக்கும் முல்லைத்தீவில் 50 குடும்பங்களுக்குமாக சுமார் 600 குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

## வவுனியாவில் திடீர் டெங்கு சோதனை



(கி.வசந்தன்)

வவுனியா நகரம் மற்றும் அதனையண்டிய பகுதிகளில் பொலிஸார் திடீர் டெங்கு சோதனை நடவடிக்கையை முன்னெடுத்ததுடன், டெங்கு நுளம்பு பெருகும் வகையில் சூழலை வைத்திருந்த பலருக்கு எதிராக வழக்குத் தாக்கலும் செய்திருந்தனர். கடந்த சில நாட்களாக பெய்த மழையின் காரணமாக டெங்கு நோய் தாக்கம் வவுனியாவில் அதிகரித்து வருகின்றது.

இதனையடுத்து வவுனியா நகரம் மற்றும் நகரையண்டிய பகுதிகளில் உள்ள வீடுகள், வர்த்தக நிலையங்கள், கல்வி நிலையங்கள் என்பவற்றில் வவுனியா பொலிசார் நேற்று (08) திடீர் சோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது, நுளம்பு குடம்பிகளும் இனங்காணப்பட்டன. அவ்வாறு இனங்காணப்பட்ட இடங்களின் வீட்டு உரிமையாளர்கள், வர்த்தக நிலைய உரிமையாளர்கள் ஆகியோருக்கு எதிராக பொலிசார் வழக்கு பதிவு செய்தனர்.

## யாழ்.கிராமங்களில் வெள்ள நீர் தேக்கம்




யாழ். மாவட்டத்தில் தொடர்ந்தும் பல கிராமங்களில் வெள்ளநீர் நிறைந்துள்ளதால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம்- தவசிகுளம், பாலாவி, ஆத்தியடி, நாவலடிக் கிராமங்களில் வெள்ள நீர் வழிந்தோடக் கூடிய வடிகாலமைப்பு இன்மையால் வெள்ள நீர் தேங்கியுள்ளது. குடியிருப்புக் காணிகள் வீதிகள் என்பன வெள்ளம் சூழ்ந்துள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இக் கிராமத்து இளைஞர்கள் இணைந்து தமது சொந்த நிதியில், தேங்கியுள்ள வெள்ள நீரை வெளியேற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

## வல்வெட்டித்துறையில் டெங்கு சோதனைகள்



வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் ஆளுகைக்குட்பட்ட பொலிகண்டி மேற்கு கிராம சேவையாளர் பிரிவுகளில் டெங்கு ஒழிப்பு சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதையடுத்து வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் ஆளுகைக்குட்பட்ட பொலிகண்டி மேற்கு கிராம சேவையாளர் பிரிவுகளில் வெள்ளிக்கிழமை (06) விசேட டெங்கு கட்டுப்பாட்டு செயற்றிட்டம், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது நுளம்பு பெருகக்கூடிய சுற்றுச்சூழலை வைத்திருந்த 12 பேர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## எல்லைத் தாண்டி மீன்பிடித்த 08 இந்திய மீனவர்கள் கைது




யாழ். நெடுந்தீவு கடற்பரப்பில் நேற்று அதிகாலை எல்லைத்தாண்டி அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 8 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது இரண்டு மீன்பிடி படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படை பேச்சாளர் தெரிவித்தார்.

கைதான மீனவர்கள் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

குறித்த 8 இந்திய மீனவர்களும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மயிலிட்டி கடற்றொழில் பரிசோதகர் காரியாலயத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக கடற்படை பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# அக்கரைப்பற்று-கல்முனை பிரதான வீதி போக்குவரத்துக்கு அனுமதி





வெள்ளப்பெருக்கினால் சேதமடைந்த அக்கரைப்பற்று-கல்முனை பிரதான வீதிக்கு (நிந்தவூர் ஊடாக) இரும்புப்பாலம் அமைத்து இன்று முதல் போக்குவரத்துக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. (படங்கள் : சுலைமான் றாபி)

# திண்மக் கழிவுகளை அகற்றும் செயல்திட்டம்




(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

சீரற்ற காலநிலையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் அடித்து வரப்பட்டு கரை ஒதுங்கியுள்ள திண்மக் கழிவுகளை சிரமதானத்தின் மூலம் துப்புரவு செய்யும் பணிகள் மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இயற்கை நேச ஆர்வலர்களான மாவட்ட மற்றும் பிரதேச இளைஞர் சம்மேளன இளைஞர், யுவதிகள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு வாவியோரமாக அமைந்துள்ள கொத்துக்குளத்து மாரியம்மன் சுற்றயல் பகுதி இயற்கை நேச ஆர்வலர்களான இளைஞர்,யுவதிகளால் சிரமதானத்தின் மூலம் சனிக்கிழமையன்று துப்புரவு செய்யப்பட்டது.

இத்திட்டத்திற்கு "நீர்கொழும்பு மறுசுழற்சி நிலையம்"ஆதரவு வழங்கியுள்ளது. சிரமதானத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட சுமார் 300 கிலோவுக்கு மேற்பட்ட பிளாஸ்டிக் பொலித்தீன் கழிவுகள், மீள் உற்பத்தி நடவடிக்கைக்காக நீர்கொழும்பு மீள் உற்பத்தி மையத்துக்கு கையளிக்கப்பட்டதாக செயற்பாட்டார்கள் தெரிவித்தனர்.

சிந்திக்காமல் நீர் நிலைகள், வடிகான்கள், கால்வாய்கள், வாவியோரங்கள், கரையோரங்கள், தெருமருங்குகள் ஆகிய பொது இடங்களில் வீசப்படுகின்ற பிளாஸ்டிக், பொலித்தீன் கழிவுகள் காரணமாக நிலமும் நீரும் மாசடைகின்றன. இயற்கைச் சூழலுக்கு ஏற்படும் மிக மோசமான பாதிப்புக்களைக் கருத்திற்கொண்டே முறையான கழிவகற்றலை ஊக்குவிக்கும் வகையில் இந்த விழிப்புணர்வு சிரமதானம் மேற்கொள்ளப்பட்டு பொலித்தீன் உட்பட திண்மக் கழிவுகள் பெருமளவில் சேகரிக்கப்பட்டன. இயற்கைக்குக் கேடு விளைவிக்காத வண்ணம் சூழலை மாசுபடுத்தாமல் பேணிப் பாதுகாக்கும் வகையில் திண்மக் கழிவுக் குப்பைகளை அகற்றும் செயல்திட்டத்தை அனைவரும் தமது வீடுகளில் இருந்தே ஆரம்பிக் வேண்டும் என இயற்கை நேச ஆர்வலர்களான இளைஞர்,யுவதிகள் தெரிவித்தனர்.

## சீரற்ற காலநிலையால்

# பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகள்



(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு பல்வேறு தன்னார்வ அமைப்புக்களால் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சிமிர்னா திருச்சபையின் சிறுவர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சின்ன ஊறணி, சத்துருக்கொண்டான், கொக்குவில், பனிச்சையடி, நாவற்கேணி, சுவிஸ் கிராமம், கிராய்மடு, அமிர்தகழி மட்டிக்களி, கருவேப்பங்கேணி ஆகிய கிராம பிரிவுகளில் உள்ள பாதிக்கப்பட்ட சிறுவர்கள் உள்ள குடும்பங்களுக்கு சுமார் 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

சிமிர்னா திருச்சபையின் தலைவரும் சிறுவர் அபிவிருத்தி திட்டத்தின் இயக்குநருமான அருட்பணி எஸ். வசந்தகுமார் தலைமையில், அதன் திட்ட முகாமையாளர் செல்வி. அமலதாஸ் கேமினியின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஜஸ்டினா ஜ/லேகா நிவாரணப் பொருள் பொதிகளை பயனாளிகளுக்குக் கையளித்தார். இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள லயன்ஸ் கழகங்கள் இணைந்து, சுமார் ஒரு மில்லியன் ரூபாய் பெறுமதியான நிவாரண பொருள்களை மாவட்டச் செயலாளரிடம் கையளித்துள்ளன.

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணதீவுப் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள ஈச்சன்தீவு கிராமத்தில் வெள்ளத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட 60 குடும்பங்களுக்கு சிவன் அருள் பவுண்டேஷன் அமைப்பின் ஸ்தாபகர் வைத்தியர் ஜே. நமசிவாயத்தின் ஒழுங்கமைப்பில் ஒன்றரை இலட்சம் ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அமைப்பின் செயலாளர் கே. பவளசிங்கம் உலர் உணவுப் பொருட்களைப் பயனாளிகளுக்கு வழங்கி வைத்தார்.

# "பொதுப்பணிக்காக என்னை தொந்தரவு செய்யுங்கள்"



(சுலைமான் றாபி)

பொதுப்பணிக்காக தன்னை தொந்தரவு செய்யுமாறு, இலங்கை இராணுவத்தின் 24ம் படைப்பிரிவின் 16வது கட்டளை தளபதியாக நியமனம் பெற்றுள்ள மேஜர் ஜெனரல் எச்.சீ.எல். களப்பத்தி பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

அண்மையில் நிந்தவூர் பிரதேச இளைஞர் தன்னார்வ அணியின் உறுப்பினர்களுடன் இடம்பெற்ற சினேகபூர்வ சந்திப்பின் போதே கட்டளைத்தளபதி இதனைத் தெரிவித்தார்.இந்த சந்திப்பானது அம்பாறை – மல்வத்தையில் அமைந்துள்ள படைத்தலைமையகத்தில் இடம்பெற்றது. தொடர்ந்தும் இங்கு கருத்து தெரிவித்த அவர்: அம்பாறை மாவட்டமானது மூவின மக்களும் ஒற்றுமையாக வாழும் மாவட்டமாகும். இங்கு வாழும் மக்களின் சகல பிரச்சினைகளிலும் பொறுப்பு வாய்ந்த முறையில் தான் பங்கெடுக்க தயாராக இருப்பதாகவும், பொதுப்பிரச்சினைகளின் போது பொதுமக்கள் தன்னை தொந்தரவு செய்யுமாறும் கேட்டுக் கொண்ட மேஜர் ஜெனரல் எச்.சீ.எல். களப்பத்தி 24 மணிநேரமும் மக்கள் பணி செய்ய தான் பணிக்கப்பட்டுள்ளதாகவும், குறிப்பாக விசேட அனர்த்தங்கள் இடம்பெறும் போது தானும், தனது படைவீரர்களும் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். இந்த சந்திப்பில் தன்னார்வ அணியின் பிரதான செயற்பாட்டாளர் எஸ்.எல்.எம். நாஸிரூன், மௌலவி ஏ.பி.எம். ஷிம்லி மற்றும் வஸீம் சஜ்ஜாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு




(எஸ்.எம்.அறூஸ்)

அட்டாளைச்சேனை - 5 கிராம அபிவிருத்தி சங்கம் ஏற்பாடு செய்த 'அனர்த்தத்தைத் தடுப்போம் அதிலிருந்து மீண்டெழுவோம்' நிகழ்வும் வைத்தியத்துறைக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் நேற்று நடைபெற்றன. அம்பாரை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப்பணிப்பாளரும், கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவருமான எம்.ஏ.சி.எம்.றியாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் திருகோணமலை மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி அல்- ஹாபீழ் என்.எம்.அப்துல்லா பிரதம அதிதியாகவும், கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.சம்சுதீன் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர். கௌரவ அதிதிகளாக அட்டாளைச்சேனை பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ. அஹமட் நஸீல், அட்டாளைச்சேனை ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் தலைவர் ஏ.ஹனீஸ், அட்டாளைச்சேனை பிரதேச சபை செயலாளர் எல்.எம்.இர்பான் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். கடந்த வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்த தனவந்தர்கள் மற்றும் அனர்த்த காலங்களில் மக்களுக்கு உதவி செய்த அனர்த்தக் குழுவினர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். அத்தோடு அவர்களுக்கான அடையாள அட்டைகளும் வழங்கி வைக்கப்பட்டன. மேலும் கடந்த வருடம் நடைபெற்ற உயர்தரப்பரீட்சையில் மருத்துவத்துறைக்கு அட்டாளைச்சேனையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 8 மாணவர்களுக்கு நினைவுச் சின்னம் மற்றும் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

## இந்து இளைஞர் பேரவை

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி

(பேரின்பராஜா சபேஷ்)

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கும் வேலைத் திட்டத்தினை மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை முன்னெடுத்து வருகிறது.

ஏறாவூர்ப் பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்கும் நிகழ்வு மயிலவெட்டுவான் பொதுக் கட்டடத்தில் சனிக்கிழமை (07) நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சீனித்தம்பி யோகேஸ்வரன் தலைமையில் மயிலவெட்டுவான் பகுதிகளில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சிவன் அருள் பவுண்டேசன் மற்றும் கனடா மொன்றியல் திருமுருகன் ஆலயத்தினால் வழங்கப்பட்ட நிதி உதவியின் மூலம் 90 குடும்பங்களுக்கு உலர் உணவு மற்றும் அரிசி பொதிகள் வழங்கப்பட்டன.



# மத்திய முகாம் வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு திறப்பு

(றியாஸ் ஆதம்)

மத்திய முகாம் பிரதேச வைத்தியசாலையில் புனரமைப்பு செய்யப்பட்ட வெளிநோயாளர் பிரிவு சனிக்கிழமை (7) உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. மத்திய முகாம் பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு வெளிநோயாளர் பிரிவினை திறந்து வைத்தார். இதன்போது பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிர், பிராந்திய திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.ஏ.எஸ்.எம்.எஸ்.ஷாபி ஆகியோர் விசேட அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர்.





பரதநாட்டிய கலைஞரும் , நாட்டிய பூசன் , யாழ். பல்கலைக்கழக நர்த்தன வித்தகரும் , நுவரெலியா நடனப்பள்ளி ஆசிரியருமான ரமேஷ்காந்தின் நெறியாள்கையில் ஆறாவது தடவையாக பரதநாட்டிய அரங்கேற்றம் சனிக்கிழமை நுவரெலியா மாநகரசபை (சினிசிட்டா) மண்டபத்தில் நடைபெற்றது. (படங்கள் : செ.திவாகரன்)

# ஏழு வருடங்களாக பயன்படுத்தப்படாத தேயிலை ஆராய்ச்சி இயந்திரம்

## தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவிப்பு

தேயிலை ஆராய்ச்சிக்காக கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரம் ஒன்று ஏழு வருடங்களாக எவ்வித ஆராய்ச்சிக்கும் பயன்படுத்தப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திரம் 12,554,583 ரூபா செலவில் இந்தியாவில் இருந்து இலங்கை தேயிலை ஆராய்ச்சி சபை கொள்வனவு செய்துள்ளது.

இது தொடர்பான கணக்காய்வு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நவம்பர் 24, 2017 அன்று கொள்வனவு செய்யப்பட்ட *(walk in type environmental controlled facility)*இந்த இயந்திரம், காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப தேயிலையின் வளர்ச்சியை ஆய்வு செய்ய பயன்படுத்த பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால் எதிர்பார்க்கப்பட்ட ஆராச்சி வெயியீடுகளை வழங்காததால் பயன்படுத்த முடியவில்லை என அறிக்கையில் தெரிவிக்கப்படிருந்தது. இந்த இயந்திரத்தை வழங்கிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முகவர்கள் இவ்விடயம் தொடர்பில் உரிய பதிலளிக்காததால், இயந்திரத்திற்கு செலவழித்த தொகை மற்றும் அதனை கொண்டு வந்து பொருத்துவதற்காக செலவழிக்கப்பட்ட பணத்தை வட்டியுடன் அறவிடுவதற்கு வழக்குத் தொடர்ந்துள்ளதாக தேயிலை ஆராய்ச்சி சபை தேசிய கணக்காய்வு அலுவகத்திற்கு தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு காரணமான தரப்பினர் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து ஏற்பட்ட நட்டத்தை அறவிட வேண்டும் என கணக்காய்வு அலுவலகம் பரிந்துரை செய்துள்ளது.

# டிப்போ காவலாளி கொலை; காசாளர்-சாரதி உட்பட மூவர் கைது

நுவரெலியா டிப்போவின் காவலாளியின் கழுத்தை அறுத்து கொன்று, அலுமாரியில் இருந்த 10 இலட்சம் ரூபா பணத்தை திருடிய சம்பவம் தொடர்பில் அதே டிப்போவின் காசாளர் மற்றும் சாரதி உட்பட மூவரை நுவரெலியா பொலிஸார் நேற்று முன்தினம் (7) கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பதுளை நெலும்வெவ, வெலிகேபொல மற்றும் மஹவ பிரதேசங்களைச் சேர்ந்த 55, 33 மற்றும் 40 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலையை டிப்போவின் காசாளரே திட்டமிட்டுள்ளார். சம்பவத்தன்று இரவு காசாளர் தலைமையில் மதுபான விருந்துபசாரம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. அச்சந்தர்ப்பத்தில் ஏனையோர் போதையில் கிடந்துள்ள நிலையில் தனது நண்பரான மஹவையை சேர்ந்த சாரதியை டிப்போவிற்குள் அழைத்து வந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

பின்னர் டிப்போ கவலாளியை பிடித்து கட்ட முயற்சித்த போது காவலாளி குழப்பம் விளைவித்ததால் மஹவ சாரதி காவலாளியின் கழுத்து பகுதியில் கத்தியால் வெட்டியுள்ளார்.

பின்னர் அலுமாரியில் இருந்த ரூ.10 இலட்சத்தை கொள்ளையிட்டு சென்றுள்ளனர். சந்தேக நபர்களை நுவரெலியா பதில் நீதவான் அம்பகஹவத்த முன்னிலையில் ஆஜர்படுத்தியதன் பின்னர், அவர்களை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

# சன்னஸ் பத்திரம் வழங்கி வைக்கும் நிகழ்வு



இலங்கை அமரபுர மகா நிகாயாவின் 16 ஆவது மகாநாயக்கர் பதவிக்கு அம்பலாங்கொட, கந்தேகெதர மகா சைத்திய பிரிவென விகாரையினதும், கொழும்பு 14, ஸ்ரீ இசிபதனாராம மகா விகாரையின் பிரதம விகாராதிபதியுமான கலாநிதி மாதம்பாகம அஸ்ஸஜி திஸ்ஸ தேரர் நியமனம் தொடர்பான சன்னஸ் பத்திரம் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (07) பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விசேட அதிதியாகவும் இந்து,இஸ்லாம், கிறிஸ்தவ மதத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

# யாழில் 300 பவுண் நகை திருடியவர் கைது

## கொழும்பில் நகைகளை வாங்கிய 3 பேரும் சிக்கினர்



(பு.கஜிந்தன்)

யாழ். மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் 300 பவுண் நகைகளை திருடிய சம்பவம் தொடர்பில் நீண்ட காலமாக தேடப்பட்டு வந்த பிரதான சந்தேக நபர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது, பெருமளவு நகைகள், ஆவணங்கள், திருட்டுக்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள், கைக்குண்டு என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம், கோப்பாய், மானிப்பாய், சுன்னாகம் பகுதி பொலிஸ் பிரிவுகளில் கடந்த இரண்டு வருடங்களாக துவிச்சக்கரவண்டியில் முகத்தை மறைத்து சென்று நூதனமாக நகைகளை திருடும் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. குறித்த சம்பவங்கள் தொடர்பில் பொலிஸாரால் நீண்ட காலமாக தேடப்பட்ட புங்குடுதீவைச் சேர்ந்த பிரதான சந்தேக நபர் கொழும்பில் தலைமறைவாக இருந்த போது இந்திக்க தலைமையிலான யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டார். சந்தேக நபரிடமிருந்து 90 பவுண் நகைகள் மீட்கப்பட்டதுடன், திருடிய நகைகளை விற்ற பணத்தில் சந்தேக நபர் கொழும்பில் சொகுசு வீடொன்றை நிர்மாணித்துள்ளமை பொலிஸ் விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது. சந்தேக நபரிடமிருந்து திருடப்பட்ட நகைகளை வாங்கிய கொழும்பைச் சேர்ந்த மூன்று பேரும் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளளர். பிரதான சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# வலம்புரி சங்கு-மட்டிகளுடன் ஒருவர் கைது



மாதம்பை பகுதியில் விற்பனைக்கு தயாராக இருந்த சுமார் 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான வலம்புரி சங்கு மற்றும் பல வகையான மட்டிகளுடன் ஒருவர் ஞாயிற்றுக்கிமை (08) கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் வலம்புரி சங்கு மற்றும் ஒருதொகை மட்டிகள் இருப்பதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில், இலங்கை விமானப்படையின் புலனாய்வு அதிகாரிகள் இதனை உறுதிப்படுத்தியதன் பின்னர், குறித்த பொருட்களை சந்தேக நபரிடமிருந்து கொள்வனவு செய்யும் நோக்கில் தம்மால் நியமிக்கப்பட்ட முகவர்களை வைத்து மாதம்பே பிரதேசத்தில் சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து விற்பனை செய்வது மற்றும் தம் வசம் வைத்திருப்பதற்கு தடைசெய்யப்பட்ட KING CONCH SEASHELL வகையைச் சேர்ந்த மட்டிகளும், CHIRAGA SPIDER CONEH வகையைச் சேர்ந்த வலம்புரி சங்கு ஒன்றும், இன்னும் சில மட்டிகளும் (நத்தை) காணப்பட்டதாக இந்த சுற்றிவளைப்பில் ஈடுபட்ட வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து அவர் பயணித்ததாக கூறப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட வலம்புரி சங்கு உட்பட மட்டிகள் , மோட்டார் சைக்கிள் என்பன மேலதிக விசாரணைகளுக்காக ஆனவிழுன்தாவ வனவிலங்கு காரியாலய உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# சாரணர் தலைவர்களுக்கான விருது சசிகுமாருக்கு

(எஸ்.கீதபொன்கலன்)

இலங்கை சாரணர் சங்கத்தில் நீண்டகாலம் சேவையாற்றிய சாரணர் தலைவர்களுக்கான விருதை,திருகோணமலை மாவட்ட சாரணர் ஆணையாளர் சிங்காரவேலு சசிகுமார் சனிக்கிழமை(7) பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

அலரிமாளிகையில் நடைபெற்ற இந் நிகழ்வில் இவருக்கான வெள்ளித்தாமரை விருது பிரதமரால் வழங்கி வைக்கப்பட்டது. நிகழ்வில் பிரதம சாரணர் ஆணையாளர் சட்டத்தரணி ஜனத்பிரித் பெர்னாண்டோவும் ஏனைய சாரண ஆணையாளர்களும் பங்குபற்றினர்.



# போதைப் பொருட்களுடன் மூவர் கைது

(ராமு தனராஜா)

ஹெரோயின், ஐஸ் மற்றும் போதை மாத்திரைகள் உடன் மூவர் நேற்று முன்தினம் (07) மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்

33.28.26 . வயதுடைய பதுளை வினிதகம பகுதியை சேர்ந்த சந்தேக நபர்களே. இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர் பதுளை விசேட பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய குறித்த சுற்றி வளைப்பை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது பதுளை புவக்கொடமுல்ல பகுதியில் சந்தேக நபர்கள் வாடகை அடிப்படையில் விடுதியொன்றை நடத்தி போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடுவதாக கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கமைய சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அச்சந்தர்ப்பத்தில் சந்தேக நபர்களிடம் இருந்து ஹெரோயின் போதைப்பொருள் 7130 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் 617 மில்லிகிராம் போதை மாத்திரைகள் 04 ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# செல்ல கதிர்காமத்தில் படகு கவிழ்ந்து ஒருவர் பலி

செல்ல கதிர்காமத்தில் இருபது ஏக்கர் குளத்தில் உல்லாசமாக படகோட்டிக் கொண்டிருந்த நான்கு இளைஞர்களுடன் படகு கவிழ்ந்ததில் இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி நேற்று உயிரிழந்துள்ளார். 20 ஏக்கர் பகுதியைச் சேர்ந்த சாமோத் தில்ஷான் என்ற 19 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் கதிர்காமம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் பிரேத பரிசோதனைக்காக ஹம்பாந்தோட்டை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.




# டில்லி நோக்கி படையெடுத்த விவசாயிகள் பேரணி மீது கண்ணீர் புகை வீச்சு

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி டில்லி நோக்கி விவசாயிகள் பேரணியாக புறப்பட்டனர். சம்பு எல்லையில் அமைத்த தடுப்புகளை உடைத்து அவர்களில் சிலர்முன்னேற முயற்சித்ததை அடுத்து பொலிஸார் கண்ணீர் புகை வீசி விரட்டினர்.

விளை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை, மற்றும் விவசாயிகள் மீதான வழக்கை இரத்து செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி விவசாயிகள் டில்லியில் முற்றுகை போராட்டத்தை அறிவித்தனர்.

இதனால் பஞ்சாப்இ ஹரியானா எல்லையில் பாதுகாப்பு பலப்படுத்தப்படு அவர்களின் முன்னேற்றத்தினை தடுக்க தடுப்புக்கள் அமைக்கப்பட்டு பாதுகாப்பு படையினர் முகாமிட்டுள்ளனர்





இந்நிலையில் சம்பு எல்லையில் அமைத்த தடுப்புகளை உடைத்து முன்னேற சிலர் முயற்சித்ததை அடுத்து பொலிஸார் கண்ணீர் புகை வீசி விரட்டினர். இதனை தொடர்ந்து அப்பகுதியில் பதட்டம் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கைதி தயாரித்த சூரிய ஒளி மின்சக்கி ஆட்டோ

ஈரோடு மாவட்டம் கவுந்தப்பாடியைச் சேர்ந்த பொறியியலாளரான யுகஆதித்தன் (வயது 32) ஒரு கொலை வழக்கில் கைதாகி கோவை மத்திய சிறையில் கடந்த 7 ஆண்டுகளாக ஆயுள் தண்டனை அனுபவித்து வருகிறார். இந்த நிலையில் சூரியஒளி மின்சக்தியால் இயங்கும் சூரியசக்தி ஆட்டோவை வடிவமைத்து முடிந்த பிறகு சிறைக் கைதிகளை சந்திக்க வரும் உறவினர்களில் வயதானவர்கள் மற்றும் நடக்க முடியாதவர்கள் அமர்ந்து செல்லும்வகையில் நுழைவாயிலிலிருந்து பார்வையாளர் அறை வரை பயன்படுத்துவதற்கு அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

சூரியசக்தி ஆட்டோவின் மீது




அனைவரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளார்.

தண்டனை காலத்தில் மத்திய சிறைச்சாலையின் தொழிற்கூடத்தில் பணியாற்றி வரும் யுகஆதித்தன் கையில் கிடைக்கும் சாதனங்களைக் கொண்டு பயன்பாடு உள்ள பொருட்களை உருவாக்குவதில் ஆர்வம் உடையவர்.

இவர் கடந்த சில மாதங்களுக்கு முன்பு சூரியஒளி மின்சக்தியால் இயங்கும் சைக்கிளை வடிவமைத்தார். இது சிறை அதிகாரிகள் மத்தியில் பாராட்டுதல்களைப் பெற்றது.

இந்த நிலையில் யுகஆதித்தன் சூரிய ஒளி மின்சக்தியால் இயங்கும் சூரியசக்தி ஆட்டோவை வடிவமைத்து ஆச்சரியப்படுத்தியுள்ளார் கோவை மத்திய சிறையில் சமையற்கூடம் உள்ளிட்ட பகுதிகளில் பயன்படுத்தப்பட்டு வரும் இந்த ஆட்டோவானது சோதனை பயன்பாடு சூரியஒளி மின் உற்பத்திக்காக தகடு பொருத்தப்பட்டுள்ளது. மேலும் இந்த ஆட்டோவில் ஓட்டுநர் இருக்கைக்கு அடியில் பேட்டரி உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகள் பொருத்தப்பட்டுள்ளன. ஒருமுறை பேட்டரி முழுவதுமாக நிரம்பினால் 200 கி.மீ. வரையிலும் தொடர்ச்சியாகப் பயன்படுத்த முடியும். இதில் சாரதி உட்பட 8 பேர் வரை அமர்ந்து பயணிக்கலாம் என கோவை சிறைத்துறை டி.ஐ.ஜி.சண்முகசுந்தரம் குறிப்பிட்டுள்ளார்.

1 இலட்சத்து 25000 இந்திய ரூபாய் மதிப்பில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆட்டோ தற்போது சோதனை அடிப்படையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதுதவிர மேலும் 2 ஆட்டோக்கள் மற்றும் ஒரு அம்புலன்ஸ் வாகனம் தயாரிக்கவும் சிறைத்துறை திட்டமிட்டுள்ளது என தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வங்காள விரிகுடாவில் புதிய காற்றழுத்த தாழ்வு :

## நாளை முதல் கனமழைக்கு வாய்ப்பு



வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது. இதன் காரணமாக தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் நாளை(10) முதல் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், தென்கிழக்கு வங்கக்கடல், இந்தியப் பெருங்கடல் பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவியது. இதன் தாக்கத்தால் அங்கு காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது. இது இன்று மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுவடைந்து, நாளை மறுதினம் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் இலங்கை – தமிழகம் கடற்கரையை நோக்கி நகரக்கூடும்.

இதன் காரணமாக தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இன்று(09) இடி, மின்னலுடன் மிதமான மழை பெய்யக்கூடும்.

நாளை(10) தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய டெல்டா மாவட்டங்கள், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களிலும், நாளை மறுதினம் (11) மேற்கண்ட மாவட்டங்கள் (இராமநாதபுரம் தவிர்த்து) மற்றும் செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

வரும் 12ஆம் திகதி செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் மாவட்டங்கள், புதுச்சேரியில் ஓரிரு இடங்களிலும், காஞ்சிபுரம், கள்ளக்குறிச்சி, டெல்டா மாவட்டங்கள், புதுக்கோட்டை, அரியலூ ர், பெரம்பலூர் மாவட்டங்கள் மற்றும் காரைக்காலில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.தமிழக மீனவர்கள் வரும் 11ஆம் திகதி வரை ஆழ்கடலுக்குச் செல்வதை தவிர்க்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

# “பாப்ஸ்” அமைப்புக்கு பிரதமர் பாராட்டு

பாப்ஸ் அமைப்பின் தன்னார்வலர்களின் செயல்பாடு, உலகளவில் இந்தியாவின் செல்வாக்கை உயர்த்தியுள்ளது,” என, பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளார்.

“பாப்ஸ்“ எனப்படும், “போச்சசன்வாசி ஸ்ரீ அக் ஷார் புருஷோத்தமன் சுவாமி நாராயண் சன்ஸ்தா“ என்ற அமைப்பு இந்தியாவில் மட்டுமன்றி, அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளில் பிரமாண்டமான இந்து கோயில்கள் உருவாக காரணமாக அமைந்துள்ளது.

இந்த அமைப்பின் தன்னார்வலர்கள், பேரிடர் சமயங்களில் பல்வேறு சேவைகள் செய்து வருகின்றனர். பாப்ஸ்



அமைப்பின், தன்னார்வலர்கள் கூட்டம் குஜராத்தின் ஆமதாபாதில் நேற்று நடந்தது. பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர் அமித் ஷா, குஜராத் முதல்வர் பூபேந்திர படேல் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

பாப்ஸ் அமைப்பின் பணி, பகவான் சுவாமிநாராயணனின் போதனைகள் வாயிலாக உலகம் முழுதும் உள்ள கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை கொண்டு வந்துள்ளது.

இந்த அமைப்பில் உள்ள ஆயிரக்கணக்கான தன்னார்வலர்கள், எந்த நெருக்கடியான சூழலிலும் பெருந்துயரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கருணை உள்ளத்துடன் சேவை செய்து வருகின்றனர். இவர்களின் இந்த அரிய பணியால், நம் நாடு வலிமை பெறுகிறது. இவர்களின் சிறப்பான செயலால், உலகளவில் நம் நாட்டின் செல்வாக்கு உயர்ந்துள்ளது.

பாப்ஸ் அமைப்பின் தன்னார்வலர்களை நான் கேட்டுக்கொள்வது எல்லாம் ஒன்றுதான். எந்த காரியத்தை எடுத்தாலும், அதில் அர்ப்பணிப்புடன் பணியாற்றுங்கள். இயற்கை விவசாயம், வேற்றுமையில் ஒற்றுமை உணர்வை பரப்புதல், போதைப்பொருளுக்கு எதிரான போராட்டம் உள்ளிட்ட விவகாரங்களுக்கு முன்னுரிமை அளித்து பணியாற்றுங்கள். வரும் 2047 இற்குள் நம் நாட்டை வளர்ந்த நாடாக மாற்ற வேண்டும் என்ற இலக்குடன் செயல்படுங்கள் என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உதம்பூரில் துப்பாக்கிச் சூடு இரு பொலிஸார் மரணம்

ஜம்மு காஷ்மீர் மாநிலம் உதம்பூர் மாவட்டத்தில் நேற்று அதிகாலை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் இந்த சம்பவத்தில் பொலிஸ் சாரதி மற்றும் ஒரு தலைமை பொலிஸ் ஆகியோர் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று காலை 6.30 மணியளவில் உதம்பூரின் ரெஹெம்பல் பகுதியில் உள்ள காளி கோயிலுக்கு அருகே பொலிஸ் வானுக்குள் துப்பாக்கி குண்டுகள் பாய்ந்த உடல்கள் கிடந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்த காவல் துறையினர் உடல்களை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது சகோதர கொலை மற்றும் தற்கொலை வழக்கு என முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.



மூத்த பொலிஸ்; அதிகாரிகள் வடக்கு காஷ்மீரின் சோபோரில் இருந்து ஜம்மு பிராந்தியத்தின் ரியாசி மாவட்டத்தில் உள்ள துணை பயிற்சி மைய (எஸ்டிசி) தல்வாராவுக்குச் சென்று கொண்டிருந்த போதே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

வாகனத்தில் பயணித்த பொலி ஸார் ஒருவர் காயமின்றி தப்பியதாகவும், அவரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவிதுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆந்திராவில் வீதி விபத்து நால்வர் பலி : நால்வர் காயம்

ஆந்திரப் பிரதேசத்தின் பல்நாடு மாவட்டத்தில் நடைபெற்ற வீதி விபத்தில் நால்வர் உயிரிழந்துள்ளதுடன் நால்வர் காயமடைந்துள்ளனர்.

அத்தங்கி–நார்கற்பள்ளி நெடுஞ் ஞ்சாலையில் சனிக்கிழ மையன்று (07) தெலுங்கானாவில் உள்ள கொண்டகட்டு ஆஞ்சநேயர் கோயிலில் வழிபாடு செய்துவிட்டு சிரிபுரம் நோக்கி பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற வாகனமே விபத்துக்குள்ளாகியுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்தவர்கள் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ள்ளனர்.

முதற்கட்ட விசாரணையில்




அதிவேகமே விபத்து ஏற்பட காரணம் என தெரியவந்துள்ளது.

# கனடாவில் இந்திய மாணவர் சுட்டுக் கொலை!

கனேடிய நகரான எட்மண்டனில் அமைந்துள்ள அடுக்குமாடி குடியிருப்பில் 20 வயதான இந்திய மாணவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு, முதல் நிலை கொலைக் குற்றம் சாட்டப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த சம்பவத்தில் வேறு எவருக்கும் தொடர்பு இருப்பதாக தாம் நம்பவில்லை என விசாரணை அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களை கைதுசெய்த போது, அவர்களிடம் ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12.30 மணியளவில் நடந்த துப்பாக்கிச் சூட்டுக்குப் பின்னர், காவலாளியாகப் பணிபுரிந்த ஹர்ஷந்தீப் சிங் என்ற மாணவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொலைக்கான காரணத்தை




பொலிஸார் இன்னும் கண்டறியவில்லை, மேலும் உயிரிழந்த மாணவரின் பிரேத பரிசோதனைகளை இன்று (09) மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.




# சிரியாவில் ஆட்சி கவிழ்ப்பு தப்பியோடிய ஜனாதிபதி மாயம்

## பாராளுமன்றம் உட்பட அரசின் முக்கிய தளங்கள் கிளர்ச்சியாளர்கள் வசம்







சிரியாவில் கடந்த 2011ஆம் ஆண்டு முதல் உள்நாட்டு போர் நடந்து வருகிறது. இந்த போரில் குறைந்தது, 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என ஐ.நா. அமைப்பு தெரிவிக்கின்றது. ஆனாலும் இந்த எண்ணிக்கையானது ஐ.நா.வின் எண்ணிக்கையை விட 2 மடங்கு அதிகம் (6 இலட்சம்) என சிரியாவின் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவிக்கின்றது.

இந்நிலையில் சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல்-ஆசாத் தலைமையிலான அரசாங்கம் நடைபெற்றுவருகிறது. அத்துடன் அந்நாட்டில் சில ஆண்டுகளாக பெரிய அளவில் வன்முறை எதுவும் ஏற்படாத நிலையில், கடந்த வாரம் மீண்டும் கிளர்ச்சி வெடித்துள்ளது. அதாவது தற்போதைய ஜனாதிபதி பஷார் அல்-ஆசாத் தலைமையிலான அரசுக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் போரில் ஈடுபட்டு வருகின்றனர். இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையே போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டமையால் மேற்படி கிளர்ச்சி வெடித்துள்ளது.

இந்நிலையில் சிரியாவில் கிளர்ச்சி படைகளின் தொடர் தாக்குதலால், அந்நாட்டு இராணுவம் தெற்கின் பெரும்பான பகுதிகளில் இருந்து வெளியேறியுள்ள நிலையில், தரா மற்றும் ஸ்வீடா நகரங்களை கிளர்ச்சிப் படைகள் கைப்பற்யுள்ளதாக தெரிவித்துள்ளது. கடந்த 2011-ஆம் ஆண்டு அந்நாட்டு ஜனாதிபதி பஷார் அல்-ஆசாத்துக்கு எதிராக தராவில் இருந்துதான் கிளர்ச்சி ஆரம்பமாகி இருந்தது.

கடந்த ஒரு வாரத்தில் சிரியாவின் இராணுவம் இழந்திருக்கும் நான்காவது மிகப் பெரிய நகரம்தான் தரா. கடந்த மாத இறுதியில் சிரியாவின் இரண்டாவது மிகப் பெரிய நகரமான அலெப்போவில் இருந்து அரசுப் படைகள் விரைவாக வெளியேறியதால், அந்த நகரை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றினர். இதைடுத்து, கடந்த வியாழக்கிழமை ஹோமா நகரையும், வெள்ளிக்கிழமை சிரியாவின் மூன்றாவது பெரிய நகரமான ஹாம்ஸ் நகரையும் கைப்பற்றினர்.

ஸ்வீடா நகராமனது, சிரியாவின் ட்ரூஸ் சிறுபான்மையினர் வசிக்கும் பகுதியாகும். அங்கு வாழ்க்கைச் செலவுகள் அதிகரிக்கப்பட்டதாலும் ட்ரூஸ் இளைஞர்கள் கட்டாய இராணுவச் சேவைகளுக்கு இணங்க மறுத்துவிட்டதாலும் கடந்த ஓர் ஆண்டுக்கும் மேலாக ஸ்வீடா, அரசுக்கு எதிரான போராட்டங்களுக்கு சாட்சியாக இருந்து வருகிறது.

தற்போது தரா மற்றும் ஸ்வீடா நகரங்கள் கிளர்ச்சிப்படைகள் கைப்பற்றியிருப்பதனால் சிரிய இராணுவப் படைகள் வசம் டமாஸ்கஸ், ஹோம்ஸ், லடாகிய மற்றும் டர்டஸ் ஆகிய நகரங்களை மட்டுமே உள்ளது. கிளச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள சிரியாவின் தரா பகுதி என்பது தலைநகரில் இருந்து 100 கி.மீட்டர் தொலைவில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே சிரியாவில் உள்ள அலெப்போ மற்றும் ஹமா பகுதிகளை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றி உள்ளனர். அவர்கள் ஹோம்ஸ் நகர் நோக்கி முன்னேறி வருகின்றனர். இதனால், ஆயிரக்கணக்கான மக்கள் அப்பகுதியில் இருந்து தப்பியோடி வருகின்றனர். இந்நகரை கைப்பற்றினால், கிளர்ச்சியாளர்களின் கை ஓங்கும் என கூறப்படுகிறது.

இந்த சூழலில், சிரியாவின் தலைநகர் டமாஸ்கசை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றி உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. அத்துடன் இந்நகரை சுற்றிலும் குவிக்கப்பட்டிருந்த அரசு படை வீரர்கள் அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. கிளர்ச்சியாளர்கள் தலைநகரை கைப்பற்றியதால் சிரிய ஜனாதிபதி பஷா ர் அல்-ஆசாத் டமாஸ்கசை விட்டு வெளியேறியுள்ளார். இதனைத்தொடர்ந்து தலைநகர் டமாஸ்கஸ் எல்லைப் பகுதியில் பஷார் அல்-ஆசாத்தின் தந்தை சிலையை கிளர்ச்சியாளர்கள் உடைத்ததுடன் டமாஸ்கசில் முக்கிய சிறையிலிருந்த கைதிகளையும் கிளர்ச்சியாளர்கள் விடுவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பாக கிளர்ச்சியாளர்கள் அமைப்பின் மூத்த தளபதியான ஹசன் அப்துல் கானி தனது வாட்ஸ்-அப் பதிவில், ”டமாஸ்கஸ் நகரத்தை பஷர் அல்-ஆசாத்திடமிருந்து விடுவித்ததாக நாங்கள் அறிவிக்கிறோம். உலகம் முழுவதும் இடம்பெயர்ந்த மக்களே, சுதந்திர சிரியா உங்களுக்காக காத்திருக்கிறது” என்று தெரிவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்களில் செய்திகள் வெளியாகி உள்ளன.


இந்நிலையில் சிரிய ஜனாதிபதி அதிபர் பஷார் அல்-ஆசாத் தப்பிச் சென்ற விமானம் மாயமாகி உள்ளதால் அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது. ரஷ்யா உள்ளிட்ட சில நாடுகள், பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் சிரியா செல்வது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது என கூறி வருகிறது. இதனால், மத்திய கிழக்கில் பதற்ற நிலை ஒன்று உருவாகி யுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# இஸ்கான் மையத்துக்கு விஷமிகளால் தீ வைப்பு; சிலைகள் எரிந்து நாசம்

## வங்கதேசத்தில் தொடரும் பரபரப்பு

வங்கதேச நாட்டில் அமைந்துள்ள இஸ்கான் மையம் தீவைத்து எரிக்கப்பட்டது. கோயிலில் இருந்த கடவுள் சிலைகள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.





வங்கதேச பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா கடந்த ஆகஸ்ட் 5ஆம் திகதி , பதவி விலகியதிலிருந்து அங்குள்ள இந்துக்களுக்கு எதிராக தொடர் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதைக் கண்டித்து வங்கதேச சனாதானி விழிப்புணர்வு இயக்கம் சார்பில் போராட்டங்கள் நடத்தப்பட்டன. இந்நிலையில், இந்த இயக்கத்தின் செய்தித் தொடர்பாளராக இருந்த சின்மோய் கிருஷ்ண தாஸ் மீது தேச துரோக வழக்கு பதிவு செய்யப்பட்டு கடந்த நவம்பர் 25ஆம் திகதி டாக்கா சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

இதனிடையே, சின்மோய் கிருஷ்ண தாஸுக்கு ஆதரவாக செயல்பட்ட ராமன் ராய் என்ற வழக்கறிஞர் கடுமையாக தாக்கப்பட்டுள்ளதாக கொல்கத்தாவில் உள்ள இஸ்கான் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் ராதாரமன் தாஸ் தெரிவித்திருந்தார். சின்மோய் கிருஷ்ண தாசுக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் ஆஜராக தயாராக இருக்கும் வழக்கறிஞர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு வங்கதேச அரசிடம் இஸ்கான் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்நிலையில் இஸ்கான் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் ராதாரமன் தாஸ் நேற்று தனது எக்ஸ் பதிவில் கூறியுள்ளதாவது:

வங்கதேசத்தின் தலைநகர் டாக்காவின் நம்ஹட்டா பகுதியில் இஸ்கான் மையம் அமைந்துள்ளது. இந்த மையம் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளது. அந்த வளாகத்தில் இருந்த கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டு இருந்த ஸ்ரீ ஸ்ரீ லஷ்மி நாராயண் உள்ளிட்ட கடவுள் சிலைகள் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளன. இந்த தீவைப்பில் கோயில் முழுவதும் எரிந்து நாசமாகியுள்ளது.

கடந்த சனிக்கிழமை அதிகாலை 2 மணி முதல் 3 மணிக்குள் இந்த கோயிலுக்குள் புகுந்த மர்ம நபர்கள் தீவைத்துள்ளனர் என அவர் அதில் தெரிவித்துள்ளார்.

# காசாவுக்கு ஆதரவளிப்பதாக ஐக்கிய அரபு ராஜ்ஜியம் உறுதி

காசா முனையில் செயல்பட்டு வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த ஆண்டு அக்டோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசாமுனைக்கு ஹமாஸ் கடத்திச் சென்றது.

இதற்கு பதிலடியாக காசாவில் உள்ள ஹமாஸ் அமைப்பினர் மீது இஸ்ரேல் அரசு போர் தொடுத்தது. சுமார் 13 மாதங்களாக நடந்து வரும் மோதலில், காசா முனையில் இதுவரை 44,056 பேர் உயிரிழந்து உள்ளதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. மேலும் 1,04,268 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த போரில் உயிரிழந்தவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் பெண்கள் மற்றும் குழந்தைகள் என காசா சுகாதார அமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது.




இந்நிலையில் காசாவில் உள்ள பலஸ்தீன மக்களுக்கு தனது ஆதரவை அளித்து வரும் ஐக்கிய அரபு ராஜ்ஜிய (UAE) நாடாளுமன்றம் இதனை பாராட்டியுள்ளது, அதே நேரத்தில் இஸ்ரேல் அரசால் நடத்தப்படும் இடைவிடாத போரினால் ஏற்பட்ட மோசமான துன்பங்கள் மற்றும் துயர நிலைமைக்கு நிரந்தரமாக தீர்வு காணப்பட்டதாக அரபு பாராளுமன்றத்தின் சபாநாயகர் முகமது அஹ்மத் அல்-யமாஹி,கூறியுள்ளார்.

இது குறித்து சபாநாயகர் முகமது அஹ்மத் அல்-யமாஹி வெளியிட்டுள்ள அறிக்கையில்;

அனைத்து மட்டங்களிலும் அரசியல் மற்றும் மனிதாபிமான அடிப்படையில் பாலஸ்தீனத்தை ஆதரிப்பதற்கு ஐக்கிய அரபு ராஜ்ஜியம் உறுதியான நிலைப்பாட்டை கொண்டுள்ளது. மேலும் பாலஸ்தீன மக்களின் தொடர்ச்சியான துன்பங்களை போக்குவதற்கு ஆதரவளிக்கும் நாடுகளில் ஐக்கிய அரபு ராஜ்ஜியம் முதன்மையாக உள்ளது. இதன் மூலம் ஐக்கிய அரபு ராஜ்ஜியம் தனது பாலஸ்தீன சகோதர சகோதரிகளுக்கு மரியாதை செலுத்துவது ஒரு தார்மீக மற்றும் மனிதாபிமானக் கடமையாகும் என்று அல்-யமாஹி கூறியுள்ளார்.

# 9 கோடிக்கு ஏலம் போகும் வெள்ளைத் தாள்



அமெரிக்காவைச் சேர்ந்த மறைந்த ஓவியர் ராபர்ட் ரேமென். முறையான கலைப்பயிற்சி இவருக்கு இல்லையென்றாலும், வெள்ளை நிற பெயிண்டிங் வரைவதில் வல்லவர். அப்படி, இவர் வரைந்த வெள்ளி நிற கேன்வாஸ் ஒன்று ஜெர்மனியில் உள்ள மியூசியத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இது வெற்றுத் தாளாக இருந்தாலும் இதில் ஆழ்ந்த அர்த்தங்கள் இருப்பதாகவும், இது ஒளி, அசைவு ஆகியவற்றை பிரதிபலிப்பதாகவும் மற்றொரு ஓவியக்கலைஞர் ஒருவர் கூறுகிறார்.

இந்த பெயிண்ட் தற்போது ஏலத்திற்கு வரவுள்ளநிலையில், ரூ. 9 கோடி முதல் ரூ. 13 கோடி வரை ஏலம்போக வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. ராபர்ட் ரேமென் (88வயது) கடந்த 2019ஆம் ஆண்டு காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மெட்ரோவில் துண்டுகளுடன் பயணித்த பெண்களால் பரபரப்பு



ரஷ்யாவை சேர்ந்தவர் கேத் சும்ஸ்கயா. பிரபல மொடல் அழகியான இவர் சமூக வலைத்தளத்தில் காணொளிகளை பதிவி டுவதை வாடிக்கையாக கொண்டுள்ளார். அத்தடன் 30 இலட்சம் பேர் இவரை பின்தொடர்ந்து வருகி றார்கள். இந்தநிலையில் தோழிகள் 3 பேருடன் இணைந்து குளியல் அறையில் பயன்படுத்தும் துண்டு மட்டும் அணிந்தவாறு மெட்ரோ ரெயிலில் பயணம் செய்தார். இதுதொடர்பான காணொளியை அவர் இன்ஸ்டாகிராமில் பதிவேற்றி உள்ளார். அதில் அரைகுறையாக உடம்பை மூடியபடி, “ஹை ஹீல்ஸ்“ செருப்பு அணிந்தவாறு அவர்கள் 4 பேரும் மெட்ரோ ரெயிலுக்குள் ஏறுகிறார்கள். பயணிகள் கூட்டம் அதிகம் இருக்கும் ரெயிலில் ஆண் பயணிகள் அருகே நெருக்கமாக அமர்ந்து கொள்கிறார்கள். பின்னர் அவர்களுடன் செல்போனில் புகைப்படம் எடுத்து கொண்டு லூட்டி அடிக்கிறார்கள். இந்த வீடியோ ஒரு வாரத்திற்குள் 20 இலட்சம் பார்வைகளையும் 25 இலட்சம் லைக்குகளையும் பெற்று வைரலாகி வருகின்றது.




## தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட்:

# 328 ஓட்டங்களுக்குள் சுருண்டது இலங்கை..!





தென்னாப்பிரிக்காவுக்கு சுற்றுப்பயனம் மேற்கொண்டுள்ள இலங்கை கிரிக்கெட் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி கெபேஹாவில் கடந்த வியாழனன்று ஆரம்பமானது.

இந்த போட்டிக்கான நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதனால் இலங்கை அணி பந்துவீச ஆரம்பித்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி தனது முதல் இன்னிங்சில் சகல விக்கெட்டுக்களை இழந்து 358 ஓட்டங்களை குவித்தது. இதில் தென்னாபிரிக்க அணியின் சாரிப்பில் வோர்ரைன் 105 ஓட்டங்களை எடுத்து ஆட்டம் இழக்காமல் களத்தில் இருந்தார். இலங்கை அணி சாரிப்பில் லஹிரு குமாரா 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இதையடுத்து கடந்த வெள்ளியன்று தனது முதல் இன்னிங்சை ஆரம்பித்த இலங்கை அணி நேற்றைய 2ஆம் நாள் போட்டி முடிவில் 3 விக்கெட்களை இழந்து 242 ஓட்டங்களை பெற்றது. இதில் இலங்கை அணி சார்பில் அஞ்சலோ மெத்யூஸ் 40 ஓட்டங்களைம், காமிந்து மெண்டிஸ் 30 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். இந்நிலையில், நேற்று இடம்பெற்ற 3ஆம் நாள் போட்டியின்போது இலங்கை அணி 116 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்தனர். இதில் அஞ்சலோ மெத்யூஸ் 44 ஓட்டங்களுடனும் காமிந்து மெண்டிஸ் 48 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க தொடர்ந்து களம் இறங்கிய தனஞ்செயா டி சில்வா 14 , குசல் மெண்டிஸ் 16 , பிரபாத் ஜெயசூர்யா 24, விஷ்வா பெர்ணாண்டோ 2 ஓட்டங்களுடனும் குறைந்த எண்ணிக்கையில் அடுத்தடுத்து ஆட்டமிழந்து சென்றனர் .

இறுதியில் இலங்கை அணி தனது முதல் இன்னிங்சில் 328 ஓட்டங்களுக்கு தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்தது .

இலங்கை அணி சார்பில் அதிகபட்சமாக பதும் நிசாங்க 89 ஓட்டங்களை பெற்றார். தென்னாபிரிக்கா அணி சார்பில் டேன் பேட்டர்சன் 5 விக்கெட்டுகளை கைப்பற்றியிருந்தார். இதனையடுத்து 32 ஓட்டங்கள் முன்னிலையுடன் தென்னாப்பிரிக்கா தனது 2ஆவது இன்னிங்சை ஆரம்பித்தது.

அதன் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான டோனி டி ஜோர்ஜி – மார்க்ரம் ஆகியோர் களமிறங்கினர்.

இந்நிலையில் டோனி டி ஜோர்ஜி 19 ஓட்டங்களில் ஆட்டமிழக்க அடுத்து வந்த ரியான் ரிக்கல்டன் 24 ஒட்டகளுக்கு ஆட்டமிழந்தார். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய மார்க்ரம் அரை சதம் விளாசி 55 ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பினார்.

இதனால் 3ஆம் நாள் போட்டி நேர முடிவில் தென்னாபிரிக்க அணி தனது சகல விக்கெட்டுகளையும் இழந்து 317 ஓட்டங்களை எடுத்தது. இலங்கை அணியின் சார்பில் பிரதாப் ஜெயசூர்யா 5 விக்கெட்டுகளையும் விஸ்வ பெர்னான்டோட 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது .

## இந்தியா - அவுஸ்திரேலியா 2ஆவது டெஸ்ட்

# நாங்கள் வெற்றி பெற அந்த 2 வீரர்களே காரணம் - கம்மின்ஸ்

இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட போர்டர் – கவாஸ்கர் கிண்ண டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் பெர்த்தில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 295 ஓட்டங்கள் என்ற வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் பகல்-இரவு போட்டியாக அடிலெய்டில் கடந்த வெள்ளியன்று ஆரம்பமானது

இதில் முதல் இன்னிங்சில்





முறையே இந்தியா 180 ஓட்டங்களை, அவுஸ்திரேலியா 337 ஓட்டங்களை பெற்றது . இதனையடுத்து 157 ஓட்டங்கள் பின்னடைவுடன் தனது 2ஆவது இன்னிங்சை ஆரம்பித்த இந்திய அணி 175 ஒட்டகளுக்கு தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன் மூலம் அவுஸ்திரேலிய அணிக்கு 19 ஓட்டங்களை மட்டுமே வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. பின்னர் எளிய இலக்கை நோக்கி களமிறங்கிய அவுஸ்திரேலியா 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரை 1-1 என்ற கணக்கில் சமன் செய்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் இந்த வெற்றியில் துடுப்பாட்டாத்தில் டிராவிஸ் ஹெட் (140 ஓட்டங்கள்) பெற ஸ்டார்க் பந்துவீச்சில் 8 விக்கெட்டுகள் கைப்பற்றி முக்கிய பங்கு வகித்தனர்.

இந்நிலையில் இந்த போட்டி முடிந்து தாங்கள் பெற்ற வெற்றி குறித்து கூறிய அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பேட் கம்மின்ஸ் கூறுகையில்,

”உண்மையிலேயே இந்த வாரம் மிகச்சிறப்பாக இருந்தது. பெர்த் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் தோல்வியை சந்தித்த நாங்கள் தற்போது மீண்டு வந்து வெற்றி பெற்றுள்ளோம். மிட்செல் ஸ்டார்க் இந்த போட்டியில் மிகச்சிறப்பான பந்துவீச்சை வெளிப்படுத்தியிருந்தார். எப்போதுமே அவர் எங்கள் அணிக்கு ஒரு முக்கிய வீரராக கடந்த 10 ஆண்டுகளாக இதை செய்து வருகிறார்.

அதேபோன்று துடுப்பாட்டத்தில் டிராவிஸ் ஹெட் இந்த மைதானத்தில் மிகச்சிறப்பான செயல்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார். ஏற்கனவே இங்கு நிறைய ஓட்டங்களை குவித்திருக்கும் அவர் மீண்டும் இம்முறையும் இந்த போட்டியில் மிகச்சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி உள்ளார். ஒரு அணியாக நாங்கள் இந்த போட்டியில் மிகச்சிறப்பான செயல்பாட்டை வெளிப்படுத்தியதால் இந்த வெற்றி கிடைத்தது” என்றார்

## லா லிகா கால்பந்து:

# ஜிரோனா அணியை வீழ்த்தி ரியல் மாட்ரிட் வெற்றி




20 முன்னணி கிளப் அணிகளுக்கு இடையில் நடைபெற்று வருகிறது. இதில் ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா 2 முறை மோத வேண்டும். லீக் முடிவில் புள்ளிகள் பட்டியலில் முதலிடத்தை பிடிக்கும் அணி சாம்பியன் பட்டத்தை வெல்லும்.

இந்த தொடரில் இலங்கை நேரப்படி நேற்று காலை 9.00 மணிக்கு நடைபெற்ற போட்டியில் ஜிரோனா – ரியல் மாட்ரிட் அணிகள் மோதின.

பரபரப்பான இந்த போட்டியில், சிறப்பாக விளையாடிய ரியல் மாட்ரிட் அணி ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்தியது. இதனால் ஆட்ட நேர முடிவில் 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. அணி சார்பில் ரியல் மாட்ரிட் அணியில் பெலிங்காம் , அர்தா குலர், எம்பாப்பே ஆகியோர் தலா ஒருகோல் அடித்து வெற்றிக்கு வழிவகுத்தமை குறிப்பிடத்தக்கது.

# மேஜர் லீக் சாக்கர்..லியோனல் மெஸ்ஸிக்கு உயர் விருது..!

இண்டர் மியாமியை வெற்றிக்கு அழைத்து சென்ற பிறகு லியோனல் மெஸ்ஸி மேஜர் லீக் சாக்கரின் மிகவும் மதிப்புமிக்க வீரராக அறிவிக்கப்பட்டார். அர்ஜென்டினா சூப்பர் ஸ்டாரான லியோனல் மெஸ்ஸியின் செயல்பாடுகள் மியாமிக்கு வழக்கமான சீசன் புள்ளிகளின் எண்ணிக்கையை பதிவு செய்ய உதவிய பின்னர் அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது. 37 வயதான லியோனல் மெஸ்ஸி 20 கோல்கள் மற்றும் 16 உதவிகளுக்குப் பிறகு லீக்-முன்னணி 36 கோல் பங்களிப்புகளுடன் வழக்கமான இந்த போட்டியை முடித்தார்.

இது அவருக்கு ஒரு சிறந்த சீசனாக அமைந்தது.இந்நிலையில் மியாமி மற்றும் மெஸ்ஸியின் சீசன் தோல்வியுடன் முடிவடைந்தது. MLS கிண்ண பிளேஆஃப்களில் முதல் சுற்றில் அதிர்ச்சி தோல்வியை சந்தித்து வெளியேறியது இன்டர் மியாமி அணி. லூசியானோ அகோஸ்டா, டியாகோ வலேரி, கில்லர்மோ பாரோஸ் ஷெலோட்டோ மற்றும் கிறிஸ்டியன் கோம்ஸ் ஆகியோருக்குப் பின்னர் மெஸ்ஸி MVP வென்ற 10வது தென் அமெரிக்கர் மற்றும் ஐந்தாவது அர்ஜன்டினா வீரர் ஆவார். இந்நிலையில்



மெஸ்ஸியின் வெற்றியானது 2024 ஆம் ஆண்டு போட்டியை பொறுத்தது என்பதாகும்.

அங்கு அவர் இன்டர் மியாமியை சப்போர்ட்டர்ஸ் ஷீல்டுக்கு அழைத்துச் சென்றார் மற்றும் ஆடுளு வரலாற்றில் சிறந்த வழக்கமான சீசன் சாதனையாக இருந்தார், மேலும் அர்ஜென்டினாவை கோபா அமெரிக்கா பட்டத்தை வெல்ல உதவினார். இது குறித்து மெஸ்ஸ ி கூறியதாவது, இந்த ஆண்டு எம்எல்எஸ் சாம்பியன் ஆக வேண்டும் என்ற பெரிய கனவை நாங்கள் கொண்டிருந்தோம். அது நடக்கவில்லை, ஆனால் அடுத்த ஆண்டு, மீண்டும் முயற்சி செய்ய வலுவாக வருவோம் என நம்பிக்கையுடன் கூறினார் லியோனல் மெஸ்ஸி. மெஸ்ஸி கடந்த ஆண்டு இன்டர் மியாமியைத் தேர்ந்தெடுத்தபோது கால்பந்து உலகில் பலரைத் திகைக்க வைத்தார், விரைவில் விளையாட்டின் மிகப்பெரிய பிராண்டுகளில் ஒன்றாக மாற்றினார்.

மெஸ்ஸி வந்த சிறிது நேரத்திலேயே லீக் கோப்பையை வென்று இன்டர் மியாமி சாதனை படைத்தது. மேலும் அவரது நம்பர் 10 ஜெர்சியானது ஆடுளு இன் மிகப்பெரிய விற்பனையாக இருந்து வருகின்றது.

இதையடுத்து லியோனல் மெஸ்ஸி 2026 ஆம் ஆண்டு நடைபெறும் உலகக்கோப்பையில் விளையாட வேண்டும் என்பது தான் அனைவரது விருப்பமாகவும் இருந்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## டெஸ்ட் கிரிக்கெட்டில் 5 இலட்சம் ஓட்டங்கள்...

# முதல் அணியாக உலக சாதனை படைத்தது இங்கிலாந்து...

இங்கிலாந்து கிரிக்கெட் அணி நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கு



இடையிலான 2ஆ வது போட்டி வெலிங்டனில் கடந்த வெள்ளியன்று ஆரம்பமானது. இதில் முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 280 ஓட்டங்களையும், நியூசிலாந்து 125 ஓட்டங்களையும் பெற்றது

பின்னர் 155 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது 2ஆவது இன்னிங்சை ஆரம்பித்த இங்கிலாந்து 6 விக்கெட்டுகளை இழந்து 427 ஓட்டங்களை குவித்த நிலையில் போட்டியை முடிவுக்கு கொண்டுவந்தது. இதன் மூலம் நியூசிலாந்து வெற்றி பெற 582 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இந்த கடுமையான இலக்கை நோக்கி களமிறங்கிய நியூசிலாந்து அணி வெறும் 259 ஓட்டங்களை மட்டுமே பெற்று தோல்வியை தழுவியது .

இந்த போட்டியில் இங்கிலாந்து அணி மாபெரும் வரலாற்று சாதனையை படைத்துள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:- 147 ஆண்டு கால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 5 இலட்சம் டெஸ்ட் ஓட்டங்கள் கடந்த முதல் அணி என்ற மாபெரும் உலக சாதனையை இங்கிலாந்து படைத்துள்ளது. இங்கிலாந்து இதுவரை 1082 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது .

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள “அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தினரால் 2024 டிசம்பர் 09ம் திகதி திங்கட்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.